தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, ஆவணி 26 (10-9-'60). சனிக்கிழமை | இதழ் 13

செய்திப்பாட்டு

வந்துவிட்டான் சீனக்காரன்

தாண்டி வந்து விட்டான்—சீனக்காரன்
தாண்டி வந்து விட்டான்!

வேண்டி வேண்டிச் சொன்ன போதும்
வெகுண் டெழுந்து நின்ற போதும்
மீண்டும் மீண்டும் எல்லை மீறி
மேலும் மேலும் இமய மேறித்

தாண்டி வந்து விட்டான்—சீனக்காரன்
தாண்டி வந்து விட்டான்.

பேச முடிந்த மட்டும் நேரு
பேசிப் பேசிப் பார்த்து விட்டார்
வீச முடிந்த மட்டும் வாயை
வீசி வீசிப் பார்த்து விட்டார்

தாண்டி வந்து விட்டான்—சீனக்காரன்
தாண்டி வந்து விட்டான்.

இந்தோ-சீனி பாய்பாய் என்றே
இனிக்க இனிக்கப் பேசினையே
அந்தோ எங்கள் இந்தி யாவில்
அடிவைத் தாயே சரியா என்றார்

தாண்டி வந்து விட்டான்—சீனக்காரன்
தாண்டி வந்து விட்டான்.

இமய முதலாய்க் குமரி வரையில்
எல்லோ ருந்தான் ஒன்றாய் உள்ளோம்
இமயத் தலையைக் கொய்து விட்டாய்
இதயம் குமுறு தென்றார் நேரு

தாண்டி வந்து விட்டான்—சீனக்காரன்
தாண்டி வந்து விட்டான்.

ஊரைப் பிடித்த தோடு நாட்டில்
உளவு பார்த்துக் கொண்டு போனான்
யாரா ருக்கோ தூது செல்லும்
அழகர் நேரு கோட்டை விட்டார்

தாண்டி வந்து விட்டான்—சீனக்காரன்
தாண்டி வந்து விட்டான்.

வாயால் பேசும் நேரு வாலே
வாழு மாதென் நாடு தம்பி
பாயும் பகையை வடவர் நாட்டில்
பறக்க டிக்கும் மறவ ரில்லை

தாண்டி வந்து விட்டான்—சீனக்காரன்
தாண்டி வந்து விட்டான்.

நாகநாதன்.

குறள் விழாக் கவியரங்கம்

5. திருவள்ளுவர் ஒருபொருளியல் கலைஞர்.

—கவிஞர் குருமாரியப்பன் பி. ஏ., பி. டி.

கண்ணதாசன் முன்னுரை.

பொருளியல் கலைஞர் வள்ளுவர் என்று
புகழ்மொழி கண்ட கவியறி வாளர்
மாரி யப்பன் தமிழை இங்கே
மழைபோற் பொழிவார் நனைக நனைக!

மொழி வாழ்த்து,

உயர்தனிச்செம் மொழிகளுக்குள் சிறந்து நாட்டில்
ஓண்டவந்த சாதியினர், மொழிகள் தந்த
துயர்தனிலும் அஞ்சாமல் பொறுத்து வாழ்ந்து,
தொல்லுலகின் நிலைமாற்றி யமைக்கும் காலப்
புயல்தனிலே செம்மொழிகள் வழக்கு மாறிப்
போய்விட்ட காலத்தும் ஒளிவிளங்கிப்
பெயர்தனிலே இனும்'கன்னித் தமிழே' என்னப்
பெருமையுற வாழ்பவளே! வாழி! வாழி!!

குறள் வாழ்த்து.

தாய்த்தமிழின் சிரசினிலே வீற்றிருக்கத்
தக்கஒளி மணிபொதிந்த மௌலி யாக
வாய்த்ததிருக் குறளே!எம் தமிழ்க்கு லத்தில்
வந்ததனிப் பெரும்பொருளே! உயிரே! வாழி!
சாய்ந்திட்ட உலகின்மைக் கூட்டி ருந்து
தன்அறிவுக் கோலால்பட் டறிவாம் மையில்
தோய்த்தெடுத்துத் திருக்குறளைத் தீட்டி வவத்த
தூயதிரு வள்ளுவ!நின் நாமம் வாழி!!

கழக வாழ்த்து.

எத்திறத்தின் அமைந்தாரும் ஒப்பு மாறும்,
எக்காலத் தவர்க்கும்உடன் படுவ தாயும்
முத்திரையிட் டமைந்தகுறட் பாவா லான
முப்பாலின் உலகநெறி வெல்க!வெல்க!
வித்தகரை ஆண்டுதொறும் வரவழைத்து,
விழாச்செய்து, திருக்குறளின் ஏற்றம்பேணும்
உத்தமர்வாழ் காரைநகர்ப் பதியின்கண்ணே
உயிர்த்ததிருக் குறட்கழகத் தொண்டு வெல்க!

தலைவர் வாழ்த்து.

இன்றையநாட் கலையரங்கில் தலைமை தாங்கும்
ஈடற்ற கவிஞர்திரு. கண்ண தாசன்
முன்நின்று கவிபாடும் பேறு பெற்றேன்;
முதற்கண்என் வணக்கம் அவர்க்(கு) உரித்தா கட்டும்!
என்எளிய கவிகேட்கும் பெரியீர்! என்றன்;
இளங்கவியில் பலகுறைகள் இருத்தல் கூடும்;
அன்னம்போல் நல்லவை கொண்(டு)அல்ல நீக்கி
அருள்புரியு மாறுபணிந்(து) இறைஞ்சு கின்றேன்.

மழையும், உழவும்.

பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்லை யென்ற
பொன்மொழியை நினைத்தேதான், பொருள்வ ளத்தை
அருளுமழைப் புகழ்பரவும் 'வான்சி றப்பை
ஆக்கித்தம் உயர்நூலின் முதற்கண் வைத்தார்!
உருளும்பே ருலகத்திற்(கு) உணவு நல்கி,
உடற்றுபசி நீக்கி,உயிர் அனைத்தும் பேணித்,
திருவிழந்து கெட்டோர்க்கும் சார்வாய் நின்று
செழுங்கருணை பொழிவதெலாம் மழையே யன்றோ!
செழுங்கருணை பொழியுமழை யளவிற் கொப்ப
சீர்மேவும் உழுதொழிலில் ஆக்கம் சேரும்;
உழுதொழிலின் ஆக்கத்தின் அளவிற் கொப்ப
உலகத்தின் பல்தொழிலும் பெருகி ஓங்கும்'
எழுகின்ற பல்வேறு தொழில்பு றத்தே
இணையற்ற செல்வங்கள் குவியும்; இந்த
ஒழுங்குநிலை தனையுணர்ந்தே வள்ளு வன்தான்
'உழவு'க்கோர் அதிகாரம் வகுத்து ரைத்தான்,

மன்னனும், நாடும்

'கொற்றவனின் செங்கோன்மைக் கொப்ப வேதான்
குவலயத்தின் பொருள்வாய்க்கும்' என்ப தோடு
மற்றவனின் குணநலனும், பண்பும் கூட
மன்பதையின் பொருள்வளத்தைப் பெருக்கும் என்றார்:
சுற்றமுடன் குடிபேணி, அண்டி னோரின்
துயர்நீக்கி, இன்சொல்லால் அளவ ளாவி
நற்கருணை புரிந்திடுமா வேந்தன் நாடு
நானிலமே புகழும்உயர் நிலையை எய்தும்.
செங்கோன்மை விடுத்துநெறி தவறின் மன்னன்
செல்வமொடு வாழ்குடியும் ஒருங்கி ழப்பான்!
பொங்குசினக் கடுமொழியும், கொடிய நோக்கும்
பொருந்துவனேல், நெடுஞ்செல்வம் தானே வீயும்
சுங்கமுடன் இறைமிகவே கேட்கும் மன்னன்
தொலைவழியில் பறித்துண்ணும் கள்வன் போன்றான்,
அங்கவனின் நாட்டில்வாழ் செல்வர் பெற்ற
அருஞ்செல்வம் வறுமையினும் இன்னா செய்யும்

பொருளின் நிலை

வறுமை ஒரு குடிமகனின் பிழையோ? அன்று?
வல்லாங்கு வாழாத குறையே! ஆயின்
மறுமையிலே வரும்இன்பம் தனையும் நீக்கி
மற்றிம்மை வாழ்வினிலும் எல்லை யில்லாச்
சிறுமையினை நல்கும் நல் குரவின் கேட்டைச்
சித்திரிக்கும் வள்ளுவரின் கருத்தை ஆய்ந்தால்
'பெறுமரிய பொருள்ஒன்றே உலகத் தார்க்குப்
பெரும்பேறும்' எனுமுண்மை நனிவிளங்கும்.
நாடுமிக வளமுடைத்த தெனினும் மக்கள்
நலிவெய்தி நல்குரவே கண்டார் அன்று;
பீடுயர்தம் குடிபேணத் தக்க செல்வம்
பெருக்குவதோ(டு) அமைபவரே மிக்கோர்; மேலும்
தேடுபொருள் மீதில்பற் றுள்ளம் கொண்டு
சேமிப்போர் சிலர்; மற்றோர் வறிய ரானோர்;
நீடுபொருள் செல்வம் ஒரு பாங்கர் சேர
நிலையழிக்கும் வறுமைமறு புறமி ருக்கும்.

பொருளின் வலிமை

நல்லாரே யெனினும்அவர் வறியர் ஆயின்
நன்குணர்ந்து சொல்லும்சொற் பொருளை ஏற்கா(து)
இல்லாரை எள்ளிநகை யாடி அன்னார்
இனியனவே செய்திடினும் இடர்வி ளைக்கும்;
எல்லாரும் பெருஞ்செல்வர் தம்மைக் காணின்
எதிர்சென்று தொழுதவரை நாவி னிக்கச்
சொல்லாரம் புனைகின்றார் என்றால் எல்லாம்
சூழும்அரும் பொருட்குவையின் வலியே யன்றோ!
ஈட்டும் நீள் செல்வத்தின் வலிமை யாலே
எட்டுணையும் தகவில்லார் பெரியர் ஆவர்;
நாட்டினணி யாகவிருந்(து) அதன் வளத்தை
நாற்றிசையும் பெருக்குவதோ(டு), இல்ல வாழ்வில்
வீட்டினளி பிறக்க, ஒளி சிறக்க மக்கள்
வினைவாழ்விற்(கு) உறுதுணையு மாகும் செல்வம்;
நீட்டியளந்(து) உரைப்பதுமேன்? பொருளி லார்க்கு
நிணிலமே இல்லை; இது கவிஞர் வாக்கு!

பொருள் முயற்சி.

தொழில்துறையில் அமையுமுத லீட்டிற் கொப்ப
தொகையான ஊதியமுண்(டு) என்ப தாலே
அழிவதூஉம், ஆவதூஉம் நோக்கி ஆக்கம்
அடையுமுறை சிந்தித்து முயல வேண்டும்;
வழியீதுவென்(று) ஆத்திரத்தில் வினை தொடங்கி
வலியபெரும் முதலினையும் இழந்தி டாமல்,
விழித்திருந்து, வினைகருதிப் பருவத் தோடு
வினையின்கண் முயன்றிட்டால் செல்வம் சேரும்.
வியனுலகச் செய்கைகளின் அடித்த ளத்தில்
விளங்குபொருள் முயற்சிகளில் சீர்மை வேண்டும்;
'அயலவரின் பெரும்பொருளைக் கொள்வேம் யாம்'என்(று)
அற்றத்தில் நினைத்திடினும் தீதே! ஆற்றும்
செயலில் ஒரு தலைநிற்கும் நிலையில், நீண்ட
செல்வம்தான் கிடைத்திடினும் இனிய தன்று;
நயனில்லா(து) எய்தியநல் செல்வத்திற்கு
நலம்பேணி எய்தும்நல் குரவே மேலாம்,

பொருளின் பயன்.

ஊருணிநீர் உலகூட்டும் தன்மை போல
உற்றோருக்(கு) உதவுதலே பொருளின் சால்பு:
பாருணவே பழமளிக்கும் பயன்ம ரம்போல்
பலருக்கும் நல்குவதே பொருளின் ஆக்கம்
ஆருயிரின் பிணிக்குமருந் தாகத் தானே
அழிந்துபடும் மரம்போலும் பொருளின் ஏற்றம்;
யாருணவும், எத்துணையும் பயன்ப டாத
அருஞ்செல்வம் பேய்காக்கும் புதையல் அன்றோ!
கரந்துண்ணுக் காக்கையென இனத்தா ரோடு
கலந்துண்டு, கொடுத்துதவி, சுற்றம் பேணி,
இரந்துண்ணும் இரவலரை இகழ்ந்தி டாமல்
இல்லையென(து) அவருள்ளம் உவக்கு மாறு
புரந்தனுப்பி, மும்மலமும் துறந்தார் போற்றிப்,
புகுந்தவிருந் தோம்பித்தன் இல்ல வாழ்வு
நிரந்தரநல் லின்பத்தில் திளைக்கும் வண்ணம்
நின்றுவளம் சுரப்பதுவே பொருளின் பண்பு:

பின்னுரை,

அருளுடையார் தென்னாட்டில் அதிகம்; நெஞ்சில்
அன்புடையார் ஏழையரில் அதிகம்; உள்ளே
இருளுடையார் வடநாட்டில் அதிகம்; கல்வி
இயல்புடையார் ருசியாவில் அதிகம்; கையில்
பொருளுடையார் மேல்நாட்டில் அதிகம்; பாரில்
புகழுடையார் பிறநாட்டில் அதிகம்; நாமோ
குறளுடையோம் குறளொன்றே பொருளாய்ப் பெற்றோம்
குறையிருந்தும் குறைச்குநிறை குறளே யன்றோ!

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 10-9-'60 | இதழ் 13

ஐந்தாண்டுத்திட்டங்கள்

இந்தியத் துணைக்கண்ட அரசாங்கத்தின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இந்த ஆண்டுடன் முடிவடைகிறது. இனி அடுத்த ஆண்டிலிருந்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கவிருக்கிறது.

முடிவடைந்த இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற நன்மைகளைப் பற்றி மத்திய, மாநில அரசுகளின் அமைச்சர்களும், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும், தான் பெரிது படுத்திப் பேசிவருகிறார்கள்.

இப்போது, இந்த ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றி மக்களுக்கு விளம்பரம் படுத்துவதற்காகத் திட்ட வாரங்கள் கொண்டாட ஏற்பாடு செய்யும் படி மாநில அரசாங்கங்களுக்கு மத்திய செய்தி—ஒலிபரப்பு அமைச்சர் அகத்திலிருந்து வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. இனி, காமராசர்கள் கண்ணை மூடிக் கொண்டு, ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றி அடுக்கடுக்காகப் பேசுவதற்கு முற்படுவார்கள்—பெரிய பெரிய விளம்பர மேடைகள் அமைப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

ஏட்டிலே இருக்கின்ற திட்டங்களை வைத்துக் கொண்டு இங்கே தேன் மழை பொழிகிறது அங்கே பொன் மழை பொழிகிறது என்று இவர்கள் கூவுவார்கள் ஆனால், நாட்டிலே நடமாடுகின்ற மக்கள் தங்களிடையே எந்த விதமான வசதியோ முன்னேற்றமோ ஏற்படாமல் இருப்பதைக் காண்பதோடு, நாளுக்கு நாள் வாழ்க்கை நிலை பயங்கரமானதாக மாறிக் கொண்டு வருவதைக் கண்டு திகிலடைத்து போயுமிருக்கிறார்கள்,

இந்த ஆண்டோடு இரண்டு ஐந்தாண்டுத்திட்டங்கள் நிறை வேறி முடிவடைகின்றன. முறைப்படி பார்த்தால் நாட்டிலே முன்னேற்றத்தின் அறிகுறியாவது தென்பட்டிருக்க வேண்டும். ஆனால், நாட்டிலே நாம் எப்படிப்பட்ட நிலையைப் பார்க்கிறோம். பத்து ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததை விட இப்போது விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. பத்து ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததை விட இப்போது வேலையில்லாத் திட்டாட்டம் கூடியிருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட இப்போது பட்டினிச் சாவு. தற்கொலை, பரதேசம் போதல் முதலியவை அதிகரித்திருக்கின்றன பத்து ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட இப்போது பிச்சைக்காரர் கூட்டம் பெருகி யிருக்கிறது.

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களும் வெற்றி பெற்றன என்பதற்கு இவை சான்றுகளாக மாட்டா. இன்னும் எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறினாலும் நாட்டின் இந்த மோசமான நிலை மாறும் என்று நம்புவதற்கில்லை. இந்த நம்பிக்கை ஏற்படாததற்குக் காரணம் என்ன?

ஐந்தாண்டுத்திட்டம் வகுப்பவர்கள், வெளிநாட்டிலிருந்து கோடிக் கணக்காய்க் கடன் வாங்கி ஏதேதோ தொழிற்சாலைகளையும், அணைக்கட்டுகளையும் ஏற்படுத்திவிட்டால் போதாது.

நாட்டு நிலைமையை மனத்திலே வைத்துக் கொண்டு திட்டம் தீட்டவேண்டும். யார் காலத்திலோ கொடுக்கப் போகிறது, நமக்கென்ன கவலை என்ற முறையில் கோடிக் கணக்கில் அயல் நாடுகளில் கடன் வாங்கி, எவ்விதமான பயனும் இல்லாத திட்டங்களை வகுப்பதும், அந்தத் திட்டங்களின் மூலம் கள்ளமார்க்கெட்டுக் காரர்கள் கொழுக்கும் வாய்ப்புகள் ஏற்படுவதும் விரும்பத்தக்கனவல்ல. இந்தத் திட்டத்தினால் இத்தனைபேருக்கு வேலை கிடைக்கும் என்ற முறையிலும், இந்தத் திட்டத்தினால் இவ்வளவு பொருள்கள் அதிக உற்பத்தியாகும் என்ற முறையிலும், இந்தத் திட்டத்தினால் நாட்டின் தேசீயப் பொருளாதாரம் தேசீய வருமானம் இத்தனை சதவிகிதம் உயரும் என்ற முறையிலும் சிந்தனையைச் செலுத்தித் திட்டம் வகுக்க வேண்டும். நாட்டிலே எந்தெந்தப் பாகங்கள் பிற்பட்ட நிலையில் இருக்கின்றன என்று கண்டு அவற்றை மற்ற பகுதிகளோடு சமமான நிலையடையச் செய்யத் திட்டம் வகுக்கவேண்டும்.

ஆனால் இப்போது வகுக்கப்பட்டுள்ள மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும்கூட தென்னாடு நன்றாகப் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட ஓரவஞ்சகமான மனத்துடன் வகுக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தால் தென்னகத்திற்கு எவ்விதமான பயனும் கிடைத்துவிடப்போவதில்லை என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம்.

ஆனால் கட்சியின் மேலிடத்திலே இருப்பவர்கள் புறக்கணிக்கப் புறக்கணிக்கத் திராவிட நாட்டு வேட்கை தென்னகத்திலே மேன்மேலும் வளர்ச்சியடைந்துதான் வரும். திராவிட நாடு திராவிடரின் நேரடியாட்சியில் இருந்தால்தான் தென்னகம் முன்னேறத் தக்க திட்டங்களை வகுத்துக்கொள்ளமுடியும். மாற்றாந்தாயின்கீழ் வளருகின்ற பிள்ளை நலமாக இருக்குமென்று எப்படி நம்ப முடியும்?

கவலை இல்லாத மனிதன்

டாக்டர் அ. சிதம்பரநாதன் கருத்து

"கவலை இல்லாத மனிதன்" என்ற படம் பல இடங்களில் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. வாய்ப்பு ஏற்பட்டால் போய் அதைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இருந்துவரும் வேளையில். பலபேர் அது ஒரு தோல்வியான படம் என்றும், நன்றாக இல்லையென்றும் சொல்லக் கேட்டேன். நண்பர்கள் பலர் இவ்வாறு சொல்லக் கேட்டேன். தமிழ்ப் பற்றுள்ளவர்கள் சிலர்கூட இவ்வாறு சொல்லக் கேட்டேன். இவ்வாறு ஒரு பிரசாரம் நடைபெற்று வருகிறது என்பது படத்தை நேரில் போய்ப் பார்த்த பிற்பாடுதான் புலப்பட்டது.

படம் தோல்வியுற்றதாக இருந்தாலுங்கூட, போய்ப் பார்த்துவிட்டு, பிடிக்கவில்லை என்றால் இடையிலேயே எழுந்து வந்துவிடலாமென்ற எண்ணத்தோடு நானும் என் மனைவியும் 'கெயிட்டி" மண்டபத்திற்குச் சென்றோம். ஆனால், படம் முடிந்த பிற்பாடு தான் திரும்பி வந்தோம் என்பதை முதலிலேயே சொல்லிவிடுகிறேன். அது விறுவிறுப்பாகப் பாய்ந்து சென்று கொண்டிருந்தமையால் தான் உட்கார்ந்து பார்த்தல் இயன்றது. பார்த்தோம் என்று மாத்திரம் சொல்லக்கூடாது; கண்டோம், சுவைத்தோம், மகிழ்ந்தோம் என்றுதான் சொல்லவேண்டும். கவிஞர் கண்ணதாசனுடைய பட்டமளிப்புச் சொற்பொழிவோடு தொடங்குகின்ற இப்படம், தொடக்கம் முதல் கடைசிவரை பார்ப்போர் உள்ளத்தைப் பற்பல சுவைகளால் கவர்ந்துவிட்டது என்பது நாங்கள் கண்கூடாகக் கண்ட செய்தி. பக்கத்தில் உட்கார்ந்த பலரும், இடைநேரத்தில் வெளியே சில நிமிட நேரம் வந்த பலரும் இது நன்றாக இல்லையென்று ஏன் ஒரு தப்புப் பிரசாரம் நடைபெறுகிறது என்று கேட்டுக்கொண்டிருந்தது எல்லாம் காதில் விழாமலில்லை.

முக்கிய பாத்திரமாக நடிக்கிற சந்திரபாபுவினுடைய ஒவ்வொரு முகத்தோற்றமும், ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு சிரிப்பும் அவர் நடிப்பின் உச்சியெல்லைக்கு ஏறிவிட்டார் என்பதை எடுத்துக் காட்டுவனவாக இருந்தன. அவருடைய மேன்மையான நடிப்பைப் பார்ப்பதற்கு மாத்திரமாவது இப்படக் காட்சிக்குச் செல்லலாம் என்ற கருத்தே எங்களுக்கு உண்டாயிற்று. இது மாத்திரமல்லாமல், அவருடன் பிறந்த மாணிக்கமாக நடிக்கும் எம். ஆர். ராதாவின் நடிப்பின் உயர்வை என்னென்று கூறுவது; அவருக்கே அமைந்த ஒருவகை அலட்சியக் குரலும், தொனி வேறுபாடும், கண் சிமிட்டலும், கையோங்கலும் ஆகிய இவற்றைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம். எம். ஆர். ராதா நாடகத்தில்தான் சமயோசிதமாகப் பேசுவார் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த எனக்கு, திரைக் கட்டுப்பாடுகளைக் கொஞ்சம் மீறி வேளைக்கேற்ப ஆங்காங்கு அழகிய கருத்துக்களைப் பெய்து அவர் சொல்லாடி இருப்பதைக் கண்டதும் வியப்பாக இருந்தது. நேரில் சென்று பார்த்தால் அல்லவா தெரியும்?

இந்த இரண்டு நடிகர்திலகங்களோடு மாத்திரம் அமையாமல் படம் டி. எஸ். பாலையா, டி. ஆர். மகாலிங்கம் ஆகிய நட்சத்திர நடிகர்களைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. அளவுக்கு மிஞ்சாமல் எவ்வளவு அழகாக டி. ஆர். மகாலிங்கத்தின் பாடல்கள் அமைந்துள்ளன! முத்து, மாணிக்கம் ஆகிய இரண்டு பிள்ளைகளின் தந்தையாக நடிக்கின்ற டி. எஸ் பாலையாவோ "மிகப் பிரமாதமாக" நடித்து இருக்கிறார். வேறு சில படங்களில் அவருடைய நடிப்பைப் பார்த்து மகிழ்ந்து இருக்கிறேனானாலும், ஒருவருக்கொருவர் ஒவ்வாத இரண்டு பிள்ளைகளின் தந்தையாக நடிக்க வேண்டிய சிரமமான பாகங்களை எல்லாம் அவர் பாங்காக நடித்திருப்பதைக் கண்டு இப்பொழுது உவந்தேன். அந்த ஜர்புலிங்கத்திற்கும் மாணிக்கத்திற்கும் இடையே நடைபெறுகின்ற உரையாடல்களே, அவ்வுரையாடல்கள்பற்றிய மெய்ப்பாட்டுநடிப்புக்களே, இந்தப் படத்தின் உயிர் என்று சொல்லுவது புனைந்துரையாகாது. பெருஞ் செல்வனாக அழகுற நடிக்கும் டி எஸ். பாலையா ஆண்டியாகவும் எவ்வளவு திறமையோடு நடித்து இருக்கிறார்!! மாணிக்கத்தால்விரும்பப்பட்டுக் கைவிடப்பட்ட காவேரியாக நடித்திருக்கிற ராஜசுலோசனாவின் அருமையான நடிப்பும் இப்படத்திற்கு அழகு தருகிறது. அவருடைய நடிப்பில் உவகைச் சுவையும் அவலச் சுவையும் வீரச் சுவையும் காணப்படுகின்றன சிவகாமியாக வருகின்ற எம். என். ராஜத்திற்கு அதிக வேலை இல்லையென்றாலுங்கூட அவரும் மிக நன்றாக நடித்திருக்கிறார்.

ஓடப்பாட்டுக்களும், நடனப் பாடல்களும் மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளன. கதையையும் உரையாடல்களையும் பாடல்களையும் கவிஞர் கண்ணதாசனே அமைத்துத் தந்துள்ளார். ஆதலால் இவை அனைத்தும் மிகவும் பொருத்தமாக ஒன்றி அமைந்துள்ளன. விசுவநாதன், ராமமூர்த்தி ஆகியவர்களது இசை அமைப்பினைப் பாராட்ட வேண்டும், சௌந்தரராஜன், ஜமுனா ராணி, ஜிக்கி, பகவதி போன்றவர்களது பின்னணிப் பாடல்களைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். தங்கப்பனுடைய 'சேரி நடனம்"போன்ற நடனங்களை இதைப்போன்ற படங்கள் தாங்கி வருவதால மக்களால் அதிகமாக விரும்பி வரவேற்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

படப்பிடிப்பும் ஒலி அமைப்பும் மிகவும் நன்றாய் அமைந்துள்ளன. முத்துவாக நடிக்கும் சந்திரபாபு பாடிக்கொண்டே தொலைவான தூரத்திற்குப் போவதுபோல் அமைந்திருக்கின்ற காட்சியின் படப்பிடிப்பும் குரல் அமைப்பும் "பிரமாதம்!' ஜர்புலிங்கத்தின் மனைவியாக நடித்திருக்கும் பி எஸ். ஞானம் காவேரியினிடத்தில் அன்புகாட்டி ஆற்றும் செய்தி ஒவ்வொன்றும் திறமை வாய்ந்தது. சேரிப் பெண்ணாக நடித்துள்ள விஜயலட்சுமியின் நடிப்பு இன்னும் வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கலாம். அதிர்ஷ்டச்சீட்டு காவேரியின் குழந்தைக்கு விழுந்ததினால், 5 லட்ச ரூபாய் அந்தக் குழந்தைக்குக் கிடைக்கப்போகிறது என்று தெரிந்ததும, மாணிக்கத்திற்கு ஏற்படுகின்ற மாறுதல்கள் எல்லாம், உளத்தோடு ஒட்டியனவும் உளத்தோடு ஒட்டாதனவும், எழில்மிகப் படம் பிடிக்கப்பட்டு இருக்கின்றன. ஒரே வாக்கியத்தில் சொல்ல வேண்டுமென்றால், மாணிக்கத்தின் பாகத்தை எம். ஆர். ராதா நடித்திருப்பதுபோல் நடிப்பது அருமையினும் அருமையென்று கூறலாம். சந்திரபாபுவோ "கவலை இல்லாத மனிதன்.' அந்தக் கவலை இல்லாத மனிதனுடைய அருமையான நடிப்பைப் பற்றிப் பேசவே வேண்டியதில்லை. அக்கவலை இல்லாத மனிதனும்; பிறருக்குக் கவலைதரும் மனிதனும் இந்தப் படத்தில் மிக மிகத் திறமையாக நடித்திருக்கிறார்களாதலால், இன்னொரு முறை இந்தப் படத்தைப் பார்ப்பதற்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கும் பொழுதுதான், இந்தக் கருத்துரையை எழுதுகின்றேன்.

படத்தில் ஓரிரண்டு குறைகள் இல்லாமல் இல்லை. எல்லாப் படங்களிலுந்தான் இருக்கின்றன. இந்தப் படத்தில், பட்டமளிப்பு விழாக் கூட்ட அமைப்பையும், வழக்காடுமன்ற நிகழ்ச்சியையும் இன்னும் நன்றாக அமைத்திருக்கலாம். மொத்தத்தில், இப்படம் விறுவிறுப்போடும் உருக்கத்தோடும் இயன்றுள்ள படம் என்பது உறுதி.

அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கட்கு

அம்பல முடங்கல்

அறங்கொன்ற பெருவீரரே !

வணக்கம் !

அருமை நண்பர் அழகர்சாமியை உயர்நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று தாங்கள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சி - அரசாங்கத்தின் வியத்தகு செயல்-ஏதோ ஒரு அநீதிபோல கருதப்பட்டு செய்திகள் வருவதைக் கண்டு திடுக்கிட்டேன்.

இத்தனைக்கும் காரணம்; சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புத்தான் என்று தெரிய வந்தபோது, எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

பாருங்களேன்; நாடாள வந்த மந்திரி, தனக்கு வேண்டிய ஒருவருக்கு ஒரு பெரிய பதவி கொடுப்பது தவறு ?

இப்படிப்பட்ட சமயங்களில்தான் "நீதிமன்றங்களையே மூடிவிட்டால் என்ன ?" என்று தோன்றுகிறது.

அரசாங்கத்தின் அதிகார பூர்வமான-உத்தரவுக்குக்கூட எதிர்ப்பு ! அதன்மீது வழக்கு - அந்த வழக்கை விசாரித்த நீதிபதிகளோ, அரசாங்க உத்தரவையே "பொறுப்பற்றது, குற்றத்தன்மையுள்ளது, கண்டனத்திற்குரியது" என்று தீர்ப்புச் செய்வதா ?

அமைச்சர்களின் பெருமை இந்த நீதிபதிகளுக்கு - சட்டக்கிணற்றுத் தவளைகளுக்கு-என்ன தெரியும் !

"மந்திரிகள் என்ன செய்தாலும் கேள்வியில்லை" என்று எல்லாச் சட்டங்களிலும் ஒரு வரி சேர்த்துக் கொண்டால், இந்த அவலநிலை வருமா ? அப்படித்தான் செய்தாக வேண்டும் !

"அரசாங்கம் பெரிதா ? நீதிமன்றம் பெரிதா ?" என்றுல், என்னைப் பொறுத்தமட்டில், தற்காலிகமாக அரசாங்கம்தான் பெரிது என்று சொல்வேன் ! மந்திரிக்குமேல் நீதிபதி பெரியவரா ? சே ! சே !!

சில, பத்தாம்பசலிகள் சொல்வார்கள் "நீதிமன்றம் பெரிது, நீதி பெரிது" என்று.

அப்படிச் சொல்கிறவர்கள் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முந்திப் பிறந்திருக்க வேண்டியவர்கள் என்பதே எனது முடிவு !

"கோவலனைக் கொன்றது அநீதி" என்று, ஒரு சாதாரணப் பெண் கண்ணகி மெய்ப்பித்ததற்காக, பாண்டியன் நெடுஞ்செழியன் சிங்காசனத்திலேயே உருண்டு செத்தானும் !

"அவனல்லவா நீதிக்குப் பயந்தவன்" என்று, உங்கள் கட்சியைச் சேர்ந்த ஏழரை நாட்டான்கள் சிலர் சொல்கிறுர்கள் ! பாராட்டுகிறுர்கள் ! பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு 'மாரடைப்பு' வந்து செத்தாலும் செத்திருக்கலாம். யார் கண்டது ?

"நீதிக்குப் பயந்தே செத்தான்" என்று சாதிக்கிறவர்கள், அவன் காலத்திலே பிறந்திருந்துவிட்டுத் தொலையாமல், இப்போது பிறந்து இருந்துகொண்டு உயிரை எடுப்பானேன் ?

"பாண்டியன் காலத்தில், தமிழன் எவருக்கும் தலை வணங்காமல் செல்வச் செருக்கிலே வாழ்ந்திருக்கிறுன். கிரேக்க நாட்டு இளைஞர்கள் தமிழகத்தில் குற்றேவல புரிந்து காலந் தள்ளிஞர்கள்" என்று சிலப்பதிகாரம் என்கிற ஏட்டில் அரச குடும்பத்தைச் சேர்ந்த பண்டாரம் ஒருவன்-அவன்தான் இளங்கோவடிகள்-எழுதி வைத்துவிட்டுப் போய் விட்டான் !

அதைப் படித்து மனப்பாடம் செய்துகொண்டு, அப்படித்தான் வாழ வேண்டும் என்று, சிலர் பிதற்றிக்கொண்டிருக்கிறுர்கள் !

எதையாவது, அல்லி அரசாணி மாலைபோலப் படித்துப் பொழுதை ஓட்டிக்கொண்டிருக்கட்டும் என்றிருந்தால், அவர்கள், நீதி, நேர்மை, அரசியல், நல்வாழ்வு, என்று எதை எதையோ பேசி, பழங்கதை சொல்கிறுர்களே !

தங்களுடைய சார்பில் அவர்களை-அந்தச் சிலப்பதிகாரப் பித்தர்களை-கேட்கிறேன்:—

அந்தக் காலத்துத் தமிழன், எவருக்கும் அடங்காமல், தலை வணங்காமல் மூர்க்கனுக-முரடனுக இருந்தால், நாமும் அப்படியே இருக்க முடியுமா-இருக்கிறேமா ?

வடநாட்டான் சில பேர், தமிழனைக் கேலி செய்ததற்காக, அவர்களையெல்லாம் கண்ணகி கோயிலுக்குச் சித்தாளாக்கி கல் தூக்கி வரச் செய்தான் பழைய தமிழன் !

அந்தப் பழைய பாதகத்தைத் தீர்ப்பதற்குத்தான், நாமெல்லாம் இப்போது வடநாட்டான் காலடியிலே கொத்தடிமையாயிருக்கிறேம்-இல்லையா ? அந்தக் காலத்துத் தமிழன் வணங்காமுடி என்று பேர் எடுத்துவிட்டான் என்று தான், நாமெல்லாம் இப்போது வடநாட்டு நாய் நரிகளுக்குக்கூட 'சாஷ்டாங்க நமஸ்காரம்' செய்து, நல்ல பேர் எடுத்து வருகிறேம் !

அந்தக் காலத்திலே, கிரேக்கம் சோனக முதலான இடங்களிலிருந்து பிழைக்க வந்தவர்களைக் குற்றேவல், செய்ய வைத்த பாவத்திற்குத்தான், இப்போது கூட்டங் கூட்டமாய் அயல் நாடுகளுக்குக் கள்ளத் தோணியிலே போகிறேம்-கடலிலே விழுந்து சாகிறேம்-இல்லையா ?

இவ்வளவு மாறுதல் ஏற்பட்ட பிறகு, நீதிமட்டும் பாண்டியன் நெடுஞ்செழியன் செய்த மாதிரி இருக்குமா-எதிர்பார்க்கலாமா- சுத்த மண்டுகள் !

இவ்வளவு பெரிய மந்திரி பதவியிலே இருக்கிறவர், ஒரே ஒரு அழகர்சாமிக்கு, குறுக்கு வழியிலே முன்னேற்றம் தரமுடியாமல், நீதிமன்றம் குறைகூறுவதாயிருந்தால், நீங்களே சொல்லுங்கள் ! - இந்த நீதிமன்றங்கள் எதற்கு ? தேவையில்லை மூடிவிடலாமே !

சிலபேர் சொல்கிறுர்கள் :-

"வேதாரண்யத்திலிருந்து குலசேகரபட்டினம் வரையிலும் கீழக் கடற்கரையில் வாழுகின்ற மக்கள், வாழ வகையின்றி இலங்கைக்குப் போய் சாகிறார்கள் ! கள்ளத்தோணியிலே போய் நடுக்கடலிலே விழுந்து சாகிறுர்கள் ! போன வாரங்கூட 33 பேர் செத்திருக்கிறார்கள் ! அரசாங்கம் இந்த சாவுகளைப் பற்றிக் கவலைப் படவே இல்லை என்று."

நான் கேட்கிறேன் உங்கள் சார்பில்; 'யார் அவர்களை அங்கே போய்ச் சாகச்சொன்னுர்கள்? இலட்சக்கணக்கான மக்கள் இங்கேயே செத்துக் கொண்டு இருக்கவில்லையா ?"

ஒவ்வொரு வாரமும், தினத்தந்தி, தினமணி, சுதேசமித்திரன், ஆகிய பத்திரிகைகளில், ஒவ்வொருவருடைய ராசி பலன்களையும் தெளிவாக எழுதிவிடுகிறுர்கள் ! அதைப் படித்துக்கொண்டு, இந்தச் சனி விலகி அந்தப் புதன் வந்தால், புதன் போய் குரு வந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று, கோடிக்கணக்கானவர்கள் இங்கேயே உயிரை விட்டுக் கொண்டிருக்கும்போது, இலங்கைக்குக் கள்ளத்தோணியில் போய்க் கடலில் உயிர்விட்டுக் கொண்டிருக்கிறுர்கள் என்றுல், இது அக்கிரமம் இல்லையா ?

நம்மைச் சீரழிக்க வேண்டும் என்றே திட்டம் செய்துகொண்டு, அங்கே போய்ச் சாகிறுர்கள் என்பது தவிர வேறென்ன ? பிழைக்கிற புத்தி இருந்தால் சாவார்களா ? கள்ள நோட்டு அச்சடித்து எத்தனைபேர் பிழைக்க முயற்சி செய்கிறுர்கள் ?

"கள்ளநோட்டுக்கும் நல்ல நோட்டுக்கும் அதிக வித்தியாசமில்லை. உபயோகிக்கும் காகிதம்தான் சிறிது வித்தியாசம்" என்று, பெரிய பதவியில் இருப்பவர்கள் சொல்லி, கள்ள நோட்டர்களுக்கு உற்சாக மூட்டவில்லையா என்ன ?

கள்ளநோட்டர்கள் புத்திசாலிகளாக இருந்தால், அரசாங்கம் உபயோகிக்கிற காகித்தையே எங்கிருந்தாவது தேடிப்பிடித்து, நல்ல நோட்டாகவே அச்சடித்து, அரசாங்கத்தின் நோட்டு அச்சடிக்கும் சிரமத்தையும் பொறுப்பையும்குறைத்து, தாங்களும் சிக்கிக்கொள்ளாமல் இருக்கட்டும் என்றுதானே சாடை காட்டிஞர்கள்-அந்தப் பெரியவர்கள்! எவ்வளவு பெருந்தன்மை !

பிழைப்பதற்கு வழிகளாயில்லை ! தி. மு. கவைத் திட்டிக்கொண்டிருந்தால் போதுமே ! என்ன வசதி வேண்டும் ? எத்தகைய வாழ்வு வேண்டும் ? கிடைக்குமே !

ஒரு புதுக்காசு யோக்கியம்கூட இல்லாத புத்திசாலிகளான எத்தனையோ பேர், அந்தத் தி. மு. க கட்சியிலேயே சில நாள் இருந்துவிட்டு, வெளியேறி 'கன்னு பின்னு' என்று உளற ஆரம்பித்த பிறகு, காங்கிரசு விருதுகளோடு முன்னேறி இருக்கவில்லையா ?

காங்கிரசுக்காரர்கள் சுதந்திரம் வாங்கினதும், சுயராஜ்யம் ஆனதும் எதற்காக ? நாட்டில் இருக்கிற ஊமை, உதவாக்கரை, எதாத்துப் பேசும் இடும்பன ஏமாளி இவர்களுக் கெல்லாம் வாழ்வு தர வேண்டும் என்று, அத்தனை பாடுபட்டார்கள்-படுகிறுர்கள் ?

மந்திரிகளுக்கும், அவர்களுக்கு மிக நெருங்கிய நண்பர்கள, சுற்றத்தார்களுக்கும் பதவி -பர்மிட் இத்தியாதி-இத்தியாதி பெறத்தான கஷ்டப் பட்டார்கள-படுகிறுர்களே தவிர, நாட்டில் கிடக்கிற அநாதைகளுக்காகவா அரசாங்கம் ?

அரசாங்கம் அதைச் செய்யவில்லை ! மந்திரிகள இதைச் செய்யவில்லை ! என்று சிலர் பொதுமக்கள் என்பவர்களதான்- சொல்லிக்கொண்டிருக்கிறுர்கள். அவர்களுக்கு குறை சொல்ல என்ன யோக்கியதை இருக்கிறது ? எவனாவது காசு வாங்காமல் ஓட்டுப் போட்டதுண்டா காங்கிரசுக்கு ?

வட நாட்டானிடம் தேர்தல் செலவுக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை வாங்கித் தேர்தல களத்திலே சூறையிட்ட பிறகுதானே ஓட்டுக் கிடைக்கிறது !

இந்த லட்சணத்தில் இதைச் செய்யவில்லை-அதைச் செய்யவில்லை என்று சொல்ல வெட்கமில்லையா அவர்களுக்கு.

அமைச்சர் பெருமானே !

இறுதியாக ஒன்று கூறி முடங்கலை முடிக்க விரும்புகிறேன்.

தாங்கள் அழகர்சாமியின் முன்னேற்றத்திற்குப் பங்கு கொண்டதை ஒரு பெருங் குற்றமாக எடுத்து, உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதைக் காரணம் காட்டித் தங்களைப் பதவியை விட்டு விலகச் செய்யலாம் என்று, சிலர் தூங்காமல் திரிகிறுர்கள் !

அவர்கள், தி. மு. க, கம்யூனிஸ்டு போன்றவர்களாயிருந்தால் கூட கவலைப்பட வேண்டியதில்லை-வெள்ளைக்காரன் கையாள், சீனுக்காரன் கையாள், என்று ஏதாவது சொல்லித் தப்பித்துக்கொள்ளலாம்-நமது வேட்டை நாய்ப் பத்திரிகைகளில், அதுபோலவேஎழுதிஏமாற்றிக் கொண்டிருக்கலாம் ! பொதுமக்கள்-மண்ணுங்கட்டிகள், என்ன செய்து விடுவார்கள் ?

அவர்களுக்கு வேண்டியது என்ன ? தேர்தலின்போது சில்லறைக் காசு ! மூச்சு விடமாட்டார்கள் !

கதர்ச்சிப்பாக்கள் பேசுகின்றனவே-தங்களைப் பேர்த்துவிட்டு, அதுகளுக்கு மிக மிக வேண்டிய ஒருவரை-நீங்கள் இருந்த இடத்தில் போட்டுவிடலாம் என்று ! பகற்கனவு தான்-ஆனுலும், சிரமந்தானே !

என்ன வந்தாலும் சரி நீங்கள் அங்குலம்கூட அசைய வேண்டாம் ! ஏதோ காங்கிரசுத் துரைத்தனத்திற்கு மானம் போய்விடாமல் காப்பாற்றுவதற்கே தங்களை விலகச் சொல்கிறேம் என்றெல்லாம் 'சரடு' விடுவார்கள் !

அத்தனையும் பொய்-பித்தலாட்டம் ! காங்கிரசுக்கு, அதன் ஆட்சிக்கு, மானம் எப்போது இருந்தது ? இல்லாத மானம் எங்கே போகும் ? எப்படிப் போகும் ? புதிதாக என்ன போய்விடப் போகிறது ? மானத்தை எல்லாம் பார்த்தால் காசாகுமா ?

ஆனுல், ஒன்று ! இந்தப் பதவி, விலகும் சாக்கை விரித்துக்கொண்டு, சாடசாத வழுக்க விழுந்தோர் ரட்சகரான நேரு பண்டிதுரை நெருங்கிப் பாருங்கள ! டில்லியிலேயே இப்போ திருப்பதைவிட வசதியான ஏதாவது ஒன்று கிடைக்கலாம்.

உங்களையும் திரு. காமராசரையும் விட்டால், வடநாட்டுத தலைவர்களுக்கு நம்பிக்கையான கையாட்கள் வேறு யார் இருக்கிறுர்கள ?

ஆதலால, டில்லியில வடவர் பிரான் நேருவின் திருவருட்கடாட்சத்தால நிச்சயமாக ஏதாவது வழி பிறக்கும ! இங்கிருப்பவன எக்கேடு கெட்டால என்ன ! ஏருக்கு முளைத்துப் போனுல்தான் என்ன ?

ஆனுல், டில்லியில் ஏதாவது உறுதியானுல் மட்டுமே சென்னையில வைத்த காலை நகர்த்த வேண்டும் ! வாழ்வுதான் பெரிது-மானமல்ல !

வந்தேமாத்வோம் !

இங்ஙனம்,

தங்கள் பெருமை பேணும்,

அருப்பைக் கிழார்.

5. முடிவிலா இன்பம்

'எல்லா உயிர்க்கும்
இன்பம் என்பது
தான்அமர்ந்து வருஉம்
மேவற் ருகும்''

—(தொல். பொருள் 219)

மக்கள் இனம் மட்டுமல்ல; விலங்கு, பறவை இனம் கூட 'எல்லா உயிர்க்கும்'' முடிவிலா இன்பம் அந்தந்த உயிரின் மனம் பொருந்தியவாறு கிடைக்கும். மனத்தின் அளவே இன்பத்தின் அளவாகும். இரு மனங்கள் ஒத்தால் தான் திருமணம் என்ற தமிழ்ப் பண்பு இவ்வழிப்பட்டதாகும்.

இன்பம்—பல்வேறு வழிகளில் பெறக்கூடியது. துன்பச் சுமைகளைச் சற்று மறக்கக் கூடிய மருந்து. மருந்தினை எப்பொழுதும் சாப்பிட முடிவதில்லை; நோய் நீங்கும் வரை மருந்து தேவை. அதுபோல வாழ்க்கைச் சூழலில் இடர்ப்பாட்டினை நீக்கும் மருந்தாய் இன்பம் பயன்படுகிறது. அந்த மருந்தாக இலக்கியம் நிலவுகிறது. இலக்கியம் தருகின்ற இன்பம் இணையிலாதது. துன்புற்றுவதியும் உள்ளங்களை இன்புறச் செய்யும் எளிமையான ஊன்றுகோல் இலக்கியமேயாகும். அத்தகைய அரிய ஊன்றுகோல் தருகின்ற சில பாடல்கள் வழி இன்பம் பெற முயல்வோம்.

தலைவன் அவன்; கட்டிளங்காளை தன் வீட்டின் முன் வேதனையோடு நிற்கிறான். விடியற்காலை நேரம். தட்டப்பட்ட கதவு தாள் திறக்கப்பட்டும் ஆள் நுழைய முடியவில்லை! பாழாய்ப்போன பல செய்திகளைக் காரணம் காட்டி நீட்டிக்கின்றனள் இல்லாள். அச் செய்திகள் தவறு; வேறு பொருளும் தருகின்ற ஆற்றல் தனக்குண்டு என்று மாற்றியமைத்து மனையுள்ளே புகமுயல்கின்றான். என்றாலும் படிக்கும் நமக்கே அவன் வந்துள்ள நிலையின் உண்மை புரிவது போல; தலைவியும் அவன் நிலையைப் புரிந்து கொண்டு சில சொல்கிறாள். அந்தச் சில செய்திகளே இன்பத்தை ஈர்த்துத் தருகின்றன.

கதவு திறக்கப்பட்டவுடன் தலைவனைக் கண்ட தலைவி முகம் வேறுபட்டு மொழிவழி வாயில் மறுக்கிறாள். கொண்ட மனைவி நான் இருக்க, கண்ட மகளிரிடம் இன்பம் பெற்று மீண்ட உமக்கு இது வீடு இல்லை என்கிறாள்.

தலைவன் பொய்ச் சிரிப்பொன்றை உதிர்த்தான். ''அதுவா? இல்லை, இல்லை. பரத்தையரைப் பார்த்ததுமில்லை; இன்பம் பெற்றதுமில்லை. நேற்று இரவு ஊரின் கோடியில் சில துறவிகள் வந்திருந்தனர். அவர்களுடன்தான் இரவு தங்கிப் பணிவிடை புரிந்தேன். கண்ணே! இது கூடவா தவறு?'' என்பது அவன் மாற்றுக் கூற்று.

இதனைக் கேட்ட தலைவிக்குச் சீற்றம் அல்லவா வருதல் முறை. சங்கத்துத் தங்கம் அவ்வாறு பொங்கியெழவில்லை. ஆனால், அவன் தங்கிவந்த இடம் மங்கை நல்லார் இல்லம் என்பதை நயமாக, உட்பொருளோடு உரைக்கும் பான்மை படித்து இன்புறக் கூடியது.

''அப்படியா, எனக்குத் தெரியவில்லைதான். நீங்கள் தங்கிவந்த முனிவர்கள் எப்படிப்பட்டவர்கள்? தெரிந்தும் இங்கு நீங்கள் வரலாமா? அவர்களுக்குச் செய்யும் பணிவிடைகளை மறந்து இங்கு வருதல் கூடாதே! மலர் சூடி மகிழும் அந்த முனிவர்களை மறந்து வருதல் பொருந்துமா? (கடவுளர்கள்) தங்கள் முழங்கால் வரை கூந்தல் உடைய அந்த முனிவர்கள் நீங்கள் பிரிந்தமை கண்டு இடர்ப்பாடு கொள்வார்கள். மீண்டும் அங்கேயே போய் விடுங்களேன்'' என்று தலைவி அளிக்கும் மறுமொழி தலைவனின் பரத்தைத் தொடர்பு மறைக்கப்பட்டும் தலைவியால் அறியப்படும் செய்தி இன்பம் தருகின்றதல்லவா?

எவ்வளவு அறிவோடு தன் தவற்றினை மறைத்தும்—அவன் உடலின் மேல் பொருந்தியிருந்த நறுமணம் பொருந்திய சந்தனமும் அதனிற் படிந்திருக்கும் கூந்தலினையும் மறந்துவந்த அவனைத் தலைவி எளிதிற் கண்டு கொண்டதுடன் கண்டிக்கவும் முற்படுகிறாள். இச் செய்தியைக் கலித்தொகை காட்டுகிறது:

''சிறுவரைத் தங்கின்
வெகுள்வார் செறுத்தக்காய்
தேறினேன் சென்றீநீ
செல்லா விடுவாயேல்
நற்ருர் அகலத்துக்
கோர்சார—மேவிய
நெட்டிருங் கூந்தற்
கடவுள ரெல்லார்க்கும்
முட்டுப்பா டாகலும் உண்டு''

—(கலி. மரு 28)

தலைவன் வீரம் உடையவன் விளக்கவியலா ஆற்றலுடை மறவன் என்பதைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. ஆனால், அத்தகு ஆற்றலமைந்த அண்ணலும் அஞ்சிக் கூறும் சொற்கள் இன்பத்தைத் தரவல்லன.

தலைவன் தன் மனம் விரும்பிய ஒத்த மனமுடைய காதலியைத் தன்னுடன் அழைத்துச் செல்கிறான். பிறர் அறியாமல் கூட்டிச் செல்கிறான். இஃது உடன்போக்கு எனப்படும். ஒப்புக்கொள்ளப்பட்ட துறையும் ஆகும். தலைவியைத் தேடி வருதல் கூடும். பிறரும் தேடிவரலாம். அந்த நிலையில் அவளுக்கு அவனைத் தவிர வேறுதுணை இல்லை. அவர்கள் செல்லும் வழியோ கடும்புலியும் வேழமும் உலவும் கானம். அந்த நிலையிலும் தலைவனின் தன்னிகரற்ற ஆற்றலே அவளுக்குத் துணையன்றி வேறில்லை. அத்தகைய அரிய தலைவன், தன் தலைவியிடம் சில சொற்கள் கூறுகிறான், அதுதான் இன்பம்''

''கண்ணே! செல்வம் மிக்க உன் இல்லம் மறந்து என்னோடு வந்துற்றனை. அதனை மறக்க அழகிய காட்டில் மணலில் அமர்ந்து விளையாடலாம். நான் உன் அருகிலேயே இருப்பேன்! இத்தோடு அமைந்தால் அழகுதான், ஆனால் மேலும் தலைவன் மொழிவதே அங்கு இன்பம்!

''உன்னை எடுத்து வந்துவிட்டேன் என்று பிறர்வரின் அஞ்சமாட்டேன். எதிர்த்துச் சென்று வெற்றி பெறுவேன்.''

பிறகென்ன, அவளுக்குக் கவலை? ஆனால்...

''கண்ணே! பிறர்வரின் அஞ்சாத நான், உன்னைப் பெற்றெடுத்த தந்தை வந்தால் இந்தப் புலிப்பாறைப் புறத்திலே சென்று ஒளிந்து கொண்டு விடுவேன்'' என்பதே இன்பம்.

புலியையும் புறங்காணச் செய்யும் புறநானூற்றுத் தமிழ் மகன் இவ்வாறு ஏன் கூறினான்? தலைவியைப் பெற்றவர்தம் தாங்கொணாத் துயரத்திற்குத் தன்னால் ஈடுகட்ட இயலாது என்பதையே இவ்வரிகள் காட்டுகின்றன. தலைவிக்குப் பிறர் பொருட்டு வருந்துன்பத்தைத் துடைக்கும் தலைவனால் தலைவியின் தந்தையால் வரும் துயரை நீக்க ஆற்றலில்லை என்பதே இன்பம்! எதிர்க்க முடியாது என்பதைக் கூறாமல் ஒளிந்து கொள்வேன் என்று உரைப்பதே இன்பம்! இது நற்றிணை தரும் விருந்தாகும்.

''நீவிளை யாடுக சிறிதே யானே
மழகளிறு உரிஞ்சிய
பராஅரை வேங்கை
மணலிடு மருகின்
இருப்புறம் பொருந்தி
அமர்வரின் அஞ்சேன்
[பெயர்குவன்
நுமர்வரின் மறைகுவென்
மாஅ யோளே''

—(நற்-362)

தமிழ் இன்பம் தருகின்ற சுவையிலே தாங்கவியலாத துயரமும் நீங்காமற் போவதில்லை. அந்தச் சுவையை அரும் பெரும் இலக்கியங்கள் அடக்கிப் பேழையாய் அமைந்துள்ளன. அந்தப் பேழையின் ஓர் ஏடுதான் அடுத்துக் காணப்போகும் இன்பம். பொருளும் அருளும் இன்றிப் பெறும் செல்வமே இலக்கிய இன்பம்.

அந்த மாளிகையுடையார் யார் தெரியுமா? ஊரிலேயே பெரும் பணம் படைத்தவர். எப்புறம் திரும்பினும் அப்புறத்தில் அவர் விரும்பும் செயல் நடைபெற எடுபிடிகள் ஏராளம். நாள்தோறும் அவர் வீட்டில் நாலாயிரம் பேர் உண்டு. செல்வர். ஆண்டு ஒன்றுக்கு வருமானம் எவ்வளவு என்பதை யாரும் அறியவியலா அளவு படைத்த செல்வம் வருகின்றது!

அப்படியா? என்று மூக்கின்மேல் சுட்டுவிரல் வைத்துப் பிறர் வியக்கலாம்!

ஆனால் அவருக்கு வாழ்வில் 'இன்பம்' இல்லை என்ற சொல்லொணாத் துயரம்!

இவ்வளவு அளவிலாப் பொருள் படைத்தவருக்குமா துயரம்? போக்குதற்கு ஏற்ற ஏவலர் இல்லையா? நீக்குதற்கேற்ற மருந்தில்லையா? என்று எண்ணலாம்.

மருந்தும், விருந்தும், ஏவலாளரும் கூடி நீக்கும் குறையாக இருந்தால் செல்வர் வருந்துவாரா? கோபமல்லவா வரும்! சினம் பிறக்கப் பிறர் பறந்து வந்து பணத்திற்குத் தலைவணங்கிப் பணிவிடை செய்து மகிழ்விப்பர்.

ஆனால் அவருக்கு இருந்த குறை ஒன்றே ஒன்றுதான்.

அங்கும் இங்கும் அலைக் கரங்களை நீட்டி-புரியாத குரலால் பெரிய செய்திகளைப் பேசுவதாய், பேசியதைப் பிறர் புரிந்துகொள்வதாய் எண்ணி-சிரிப்பை உதிர்த்து மகிழும். என்றோ ஒரு நாள், அழகிய தட்டில் சுவையுடைய நெய்ச்சோறு இடப்பட்டிருக்கிறது. நண்பர்கள் வந்து உணவு உண்ணப் போகிறார்கள். அந்த நிலையில் அந்தச் சுவையுடைய உணவு அங்குமிங்கும் தரையில் சிதறிக் கிடக்கின்றது அதைக் கண்ட எளிய வீட்டிற்குடையார் கோபம் கொள்ளாமல் சிரித்து மகிழ்கின்றார்.

சிந்தையிலே தெளிவில்லையா? இல்லை! தெளிவு படைத்த உள்ளம் உடையவர், சினம் கொள்ளாது சிரித்து மகிழும் செய்தி வேறெதுவுமில்லை. தம் அருமைக் குழந்தையின் செயல்கள் தான்.

உடலெல்லாம் உணவினை வாரியிறைத்து உளறிக் கொட்டிச் சிரித்து மகிழும் செல்வம் குழந்தைச் செல்வம் தான்! அந்தத் தேன்சுவை சிந்தும் சொல்லும் செயலும் இனிப்புதான்.

ஏவலரையும் காவலரையும் ஏராளமாகப் பெற்ற அந்தச் செல்வருக்குச் சிரித்து மகிழச் செய்ய-இன்பம் தரத்தக்க செல்வம்-ஒரு குழந்தை இல்லையே என்ற ஏக்கமே நின்று நிலவியது.

குழந்தைப்பேறு இல்லையே என்ற துன்பத்தை நீக்கவல்ல துணையே இவ்வுலகில் எதுவும் இல்லை. அந்த அளவிலாச் செல்வம் எந்தத் துயரைத் துடைத்தாலும் குழந்தை தரும் இணையற்ற இன்பத்தைத் தரமுடியவில்லை. தரமுடியாததால்தான் செல்வமுடைய அவருக்குத் துயரம்! வாழும் நாள் முழுதும் அவருக்கு இன்பம் இல்லை. இன்பமின்றித் துன்பத்தை இதயத்திலே பெற்று வாழும் வாழ்வு ஒரு வாழ்வாகுமா? அந்த வாழ்வு துன்ப வாழ்வேயாகும். இந்த அரிய கருத்தைப் புறநானூறு கூறுகிறது.

''படைப்புப்பல படைத்துப்
பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ
ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து
சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங்
கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின்
மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை
யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்
தாம்வாழு நாளே''

— (புறம்-188)

இதன் திரண்ட கருத்தைப் பலரும் குறிப்பாகப் பாமரரும் அறியக் கவிதை படைக்கும் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் கூறுகிறார்:

''பெற்றோரே செல்வங்கள்
பெற்றார் — ஒரு
பிள்ளையில்லார்
என்ன பெற்றார்?
கற்றோரும் மற்றோரும்
வற்றாத இன்பங்கள்
ஐயா உனைக்கண்டு பெற்றார்.''

இறந்த கால இலக்கியங்களைப் படித்தறியமுடியாத பாமர மக்களுக்குப் பாலும் தேனுமாய்ப் பாட்டின் மூலம் சுவை ஊட்டிவரும் கவிஞர் கண்ணதாசன் ஒரு விடிவெள்ளி என்பதை எவரும் ஒப்புவர்.

இலக்கிய இன்பம் இருப்பதால் அன்றோ கவிஞர் அவர்கள் கவலையில்லாத மனிதனாக அமைதி வாழ்வு வாழ முடிகிறது! அந்த அரிய நிலையை அடைய இலக்கிய இன்பம் வழி காட்டுமாக!

அடுத்த கிழமை ''அன்பின் வழி''

மல்லிகைப் பந்தல்

20. பூட்டிக் கிடந்த மாளிகை

யாரோ வீட்டினுள் நடமாடிய சத்தம் கேட்டது. வெளியில் சென்ற உருவமும் தெரிந்தது. ஆனுல், தெருக்கதவு திறந்த சத்தமோ சாத்திய சத்தமோ கேட்காததனுல் கதவு எப்படி யிருக்கிறது என்று பார்த்துவர வேண்டுமென்று தங்கத்திற்குத் தோன்றியது. ஆனுல் சென்று பார்க்க அச்சமாகவும் இருந்தது. கடைசியில் ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அறையைவிட்டு வெளியே வந்தாள். கதவை நோக்கிச் சென்ருள். மின் விளக்கைத் தட்டி விட்டாள். கதவு உட்புறம் தாழிட்டபடியே இருந்தது.

"வெறும் மனத்தோற்றம்" என்று தன் மனத்திற்குள் எண்ணிக்கொண்டு விளக்கை யணைத்துவிட்டுத் தன் அறைக்குத் திரும்பினுள்.

படுக்கையில் அவள் சாய்ந்த மறுகணம், மீண்டும் யாரோ வீட்டிற்குள் நடமாடுவதுபோலவும் மாடி நோக்கிச் செல்வதுபோலவும் ஓசை கேட்டது.

தங்கம் கூர்ந்து கவனித்தாள். அதற்குப் பிறகு ஓசையே எழவில்லை.

"பொல்லாத மனம்!" என்று நினைத்துக்கொண்டே, போர்வையை இழுத்து மூடிக்கொண்டு தூங்க முயன்ருள். ஆனுல் தூக்கம் வரவில்லை.

மீண்டும், ஜமீந்தார் மாளிகை எண்ணங்கள் அவள் நெஞ்சைப் பிடித்துக் கொண்டன.

∴

இவ்வளவு நாளும் அண்ணுமலைப் பண்டிதர் கந்தசாமி வாத்தியாரின் வீட்டில் தங்கியிருந்தார். இடையிடையே கதலிப்பட்டனம் போய்வந்தார். இப்போது திடீர் என்று ஒருநாள் அவர் தான் சென்னைக்குப் போய் வரவேண்டிய வேலையிருக்கிறதென்று சொன்னுர். இதைக் கேட்டதும் கந்தசாமிப் பண்டிதர் அதிர்ந்துபோனுர். யார்மீதும் பண்டிதருக்குக் கோபமோ என்றுகூட அவர் எண்ணி அதைக் கேட்கவும் முடியாமல் தத்தளித்தார். ஆனுல், அண்ணுமலைப் பண்டிதர் தாம் ஓர் அவசர வேலையாகப் போக வேண்டியிருக்கிறதென்றும், போய் அந்த வேலையை முடித்துக்கொண்டு வந்து தகவல் தெரிவிப்பதாகவும். திரும்பிவர நான்கைந்து நாட்கள் ஆகுமென்றும் தெரிவித்தபடியால், உண்மையாகவே ஏதோ வேலையாகத்தான் போகிருர் என்று நம்பிக்கை கொண்டார் கந்தசாமி வாத்தியார்.

அண்ணுமலைப் பண்டிதர் சென்னைக்குப் புறப்படுகிற அன்று கதலிப் பட்டனம் ஜமீந்தாருடைய மாட்டு வண்டி வரவில்லை. அண்ணுமலைப் பண்டிதரும், கந்தசாமி வாத்தியாரும், முருகேச வாத்தியாருமாக வீட்டிலிருந்து புறப்பட்டு நெய்யூர் நடுத்தெருவுக்குச் சென்ருர்கள்.

நெய்யூர் நடுத்தெருதான் அயலூர்களை இணைத்துக்கொண்டு ஓடுகின்ற பெருந்தெரு. அதன் வழியாகத்தான் கதலிப்பட்டனம் போகின்ற கார் வரும். அந்தக் காரில் ஏறிக்கொண்டால், நேராகக் கதலிப்பட்டனம் புகைவண்டி நிலையத்தில் போய் இறங்கிக்கொள்ளலாம்.

நடுத்தெருவிலே போய் நின்றதும், அண்ணுமலைப் பண்டிதரைப் பார்த்து அறிமுகமாகி யிருந்தவர்களும், அறிமுகமே யாகாதவர்களுமான அந்த ஊர் மக்கள் பலர் நெருங்கிவந்து வணக்கம் செலுத்தி நலம் விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படியாகப் பொழுது போய்க் கொண்டிருந்தபோது, பஸ் வந்து விட்டது. அங்கே வழக்கமாக நிற்கின்ற இடத்தில் பஸ் வந்து நின்றவுடன் "சரி, கந்தசாமி! முருகேசர்! நான் போய்வருகின்றேன். உங்கள் அன்புறவை விட்டுப் பிரிந்து போவது எனக்கும் ஏதோ மாதிரியாகத்தான் இருக்கிறது. ஆனுல், காலத்தின் கட்டளைகளை நாம் மீறமுடியாது! உங்கள் அன்புக்கு நன்றி. வீட்டில் எல்லோருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள்!" என்று கூறிவிட்டு அண்ணுமலைப் பண்டிதர் பஸ்ஸை நோக்கி நடந்தார். அவர் பேச்சை நோக்கும்போது அவர் தங்களையெல்லாம் விட்டு நெடுநாள் பிரிந்திருக்கப்போவது போல் பேசுவதாகத்தான் தோன்றியது. கந்தசாமிப் பண்டிதருக்குத் தன் அகத்துக்குள் இந்த உணர்ச்சி தோன்ருமல் இல்லை. அவர் ஏதோ இழக்கத் தகாத பொருள் ஒன்றை இழப்பதுபோன்ற உணர்ச்சியுடன் அண்ணுமலைப் பண்டிதரை நோக்கினுர்.

"கந்தசாமி! வருந்தாதே, சீக்கிரம் திரும்பிவந்துவிடுவேன்!" என்று ஆறுதல் கூறினுர் பண்டிதர். அவர் கூறிய ஆறுதல் மொழி-அதன் பாவம் ஏதோ தன்னைச் சமாதானப் படுத்துவதற்காகக் கூறியதாகத் தோன்றியதே தவிரக் கந்தசாமி வாத்தியாருக்கு உண்மையானதாகப் படவில்லை. கந்தசாமி வாத்தியாரின் துயரந் தோய்ந்த முகத்தைக் கண்ட அண்ணுமலைப் பண்டிதர், அவர் தம்மிடம் எவ்வளவு ஆழ்ந்த பற்றுதல் வைத்திருக்கிருர் என்பதை நன்கு உணர்ந்தார். ஆதலினுல் தான் பச்சைப் பிள்ளைக்குச் சொல்வதுபோல் ஆறுதல் கூறினுர். முருகேச வாத்தியாரும் வருத்தப்பட்டார் என்ருலும் கந்தசாமி வாத்தியார் அளவு இல்லை யென்றே சொல்ல வேண்டும். அண்ணுமலைப் பண்டிதர் பஸ்ஸில் ஏறுகின்ற சமயம் முருகேச வாத்தியார் தாம் கையில் கொண்டு வந்திருந்த பையில் இருந்து ஒரு ரோஜாப் பூ மாலையை எடுத்துத் திடீரென்று அண்ணுமலைப் பண்டிதரின் கழுத்தில் போட்டார். உடனே பஸ்ஸில் இருந்த சிலரும் கீழே நின்று கொண்டிருந்த சிலரும் கைதட்டி ஆரவாரித்தார்கள். "இதெல்லாம் என்ன முருகேசரே! ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று பண்டிதர் கடிந்து கொண்டார்.

முருகேசர் அவர் கடிந்து கொண்டதைப் பாராட்டாமல் முகத்தில் ஒரு புன்சிரிப்பைத் தேக்கிக் கொண்டு, "எங்களை யெல்லாம் மறந்து விடக் கூடாது!" என்று கேட்டுக் கொண்டார்.

பண்டிதர் அதற்குப்பதில் சொல்லாமல், கந்தசாமி வாத்தியாரை நோக்கி, "கந்தசாமி, வீட்டில் எல்லோரிடமும் சொல்லு! தங்கத்தை எச்சரிக்கையாகப் பார்த்துக்கொள். உலகந் தெரியாத பெண்!" என்று சொன்னுர்.

அவர் இந்த வார்த்தைகளைக் கூறி முடித்தவுடன் பஸ் புறப்பட்டுவிட்டது.

வெறிச்சென்ற உள்ளத்தோடு கந்தசாமி வாத்தியார் முருகேசரைப் பின் தொடர்ந்து திரும்பினுர்.

பாதி வழியில் முருகேசரும் பிரிந்து போய் விட்டார்.

தன்னந் தனியாக வீட்டிற்குள்ளே நுழைந்த கந்தசாமி வாத்தியாருக்கு வீடே வெறிச்சென்று இருப்பதுபோல் தோன்றியது.

எப்போதும் வீட்டிலேயே ஓடி ஆடிக் கொண்டிருந்த குழந்தைகள் ஒருநாளைக்கில்லா விட்டால் அந்த வீடு ஒன்றுமில்லாத வீடுபோல் தோன்றுவது உண்டு. ஆனுல், பேசாமல் தன் அறையிலேயே குந்திப் படித்துக் கொண்டு இருக்கக் கூடிய அந்தப் பெரிய மனிதர் இல்லாததே கந்தசாமி வாத்தியாருக்கு வெறிச் சென்றிருந்தது.

மரகத அம்மாளும் கந்தசாமி வாத்தியாரைப் போலத்தான்-ஏன் கொஞ்சம் அதிகமாகவே—அண்ணுமலைப் பண்டிதர் போவதை எண்ணி வருந்தினுள். ஆனுல், எதையும் பொறுத்துக் கொள்ளும் இதயம் படைத்தவள் ஆகவே அவள் தன் துன்பத்தை அவ்வளவு பெரிதாகக் காட்டிக் கொள்ளவில்லை. தங்கம், பண்டிதர் சென்றது பற்றி வருத்தப்படவில்லை என்ருலும் அவளுக்கு என்னவோ போலத்தானிருந்தது.

அண்ணுமலைப் பண்டிதர் சென்னைக்குப் புறப்பட்டுப்போய் ஐந்தாவது நாள் கந்தசாமிப் பண்டிதருக்கு ஓர் அஞ்சலட்டை வந்தது. அண்ணுமலைப் பண்டிதர்தான் எழுதியிருந்தார்.

கந்தசாமி,

நலம் விளைக! வந்த வேலை முடிந்தவுடன் திரும்பலாமென்று தான் எண்ணம். வேலை முடியவில்லை. தாமதமாகும் போல் இருக்கிறது. மரகதம் தங்கம் இருவருக்கும் என் வாழ்த்துக்கள்.

அன்பன்,
அண்ணுமலை.

இந்த அஞ்சலட்டைக்குப் பிறகு பண்டிதரிடமிருந்து எந்த விதமான தகவலும் வரவில்லை. ஏறக்குறைய ஒரு மாதம் சென்றுவிட்டது. அவர் பிரிவைப் பற்றி இருந்த துயரம் சிறுகச் சிறுகக் குறைந்துவிட்டது. இடையிடையே அவர் நினைவு வந்தாலும், அது அவர்களைத் துயரில் ஆழ்த்தும் தன்மை குறைந்ததாகவே யிருந்தது.

பிரிவின் தன்மையே இப்படித்தான் இருக்கும்போலும். முதலில் மிகவும் மனத்துக்குகந்த ஒரு பொருளையோ, ஆளையோ பிரியும்போது பெரு வேதனையாக இருந்து பிறகு படிப்படியாக அந்த வேதனை குறைந்துவிடுவது உலக இயற்கை போலிருக்கிறது.

தனிப்பட்டவர்களின் வாழ்க்கையில் மட்டுமல்ல, நாட்டியலிலும்கூட நிலைமை இதேதான். யாராவது ஒரு நாட்டுத் தலைவர் இருக்கும்போது, அவருடைய செயற்கரும் செயல்களையும் திறமைகளையும் கண்டு இவருக்குப்பின் இனி எப்படி நாடு நடைபெறப்போகிறதோ என்று ஐயுறுவது மக்கள் இயல்பு.

அவர் இறந்தோ மறைந்தோ போய் விடும் சமயங்களில் இந்த உணர்ச்சி பெருத்த அளவில் ஏற்படுவதுண்டு. ஆனால், நாளடைவில் அவரில்லாமலே கூட நாடு இயங்கிக்கொண்டிருக்கிற தன்மையைக் கண்டபிறகு, எழுந்த ஐயுறவெல்லாம் எங்கோ ஓடி மறைந்து விடுவது கண்கூடு.

அண்ணுமலைப் பண்டிதர் சென்னைக் குப் போனபிறகு, ஜமீந்தார் வீட்டி லிருந்து இரண்டு மூன்று முறை ஆளனுப்பித் தங்கத்தை அழைத்து வரச் செய்தார்கள். தங்கத்திற்கு அங்கு போக விருப்பம் இல்லையென்றாலும் மரகத அம்மாள், "ஏன் பெரியவர் களுடைய ஆசையை மறுக்கவேண் டும்? போய் ஒருநாள் இருந்துவிட்டு வாவேன்!" என்று சொல்லித் தங் கத்தை அனுப்பிவைத்தாள். தங்கம் அங்குபோய், ஜமீந்தார் கருணாகரருட னும், ஜமீந்தாரிணி பெரியம்மாவுடனும் பேசிக்கொண்டிருந்துவிட்டு வருவாள். ஆனால், இந்தத் தடவைகளிலெல்லாம், ஜமீந்தார் வீட்டில், தங்கத்திற்கு அவர் கள் நகைகளோ பொருள்களோ கொடுத்துக் கோபப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருநாள் தங்கம் ஜமீந்தார் வீட்டுக் குப் போய்த் திரும்பிவந்தாள். வாசலில் அவளை இறக்கி விட்டுவிட்டு வண்டிக் காரன் போய்விட்டான்.

அவள் வீட்டிற்குள் நுழைந்தபோது, மரகத அம்மாளுடன், ராதா உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாள்.

தங்கத்தைக் கண்டவுடன் மரகத அம்மாள், 'ஏம்மா தங்கம், ராதா சொல்வது உண்மைதானா?" என்று கேட்டாள்.

"ராதா என்ன?" என்று தங்கம் அவள் பக்கம் திரும்பிக்கேட்டாள்.

ராதா முதலில் தயங்கினாள். "ஜமீந் தார் கருணாகரர் மாளிகையை யாரோ விலைக்கு வாங்கிவிட்டார்களாம். ஜமீந் தார் வீட்டார் பட்டணத்துக்குப் புறப் பட்டுப் போய் அங்கேயே இருக்கப் போகிறார்களாம்! இப்படி ஊரில் பேசிக் கொள்கிறார்கள்." என்றாள் ராதா.

"எனக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாதே!" என்று வியப்புக்குறி யுடன் சொன்னாள் தங்கம்.

"உனக்கு யார் இந்தச் செய்தியைச் சொன்னார்கள்?" என்று ராதாவை மரகத அம்மாள் கேட்டாள்.

"கோயிலில்தான் எல்லோரும்பேசிக் கொண்டார்கள். இன்னும் என்னென்ன வோ பேசிக்கொண்டார்கள். ஜமீந்தார் பெரிய செலவாளியாம். நிறையக் கடன் வாங்கியிருந்தாராம். அவரைக் கடனாளியாக்கியதே அண்ணாமலைப் பண்டிதர்தானாம். அந்தக் கடனையெல் லாம் அடைப்பதற்காகத்தான் இப் போது மாளிகையைவிற்றுவிட்டாராம்!" என்றாள் ராதா.

அண்ணாமலைப் பண்டிதரைப் பற்றிக் குறிப்பிட்டதும் மரகத அம்மாள் முகம் சுளித்தது. தங்கத்திற்குத் திடுக் கிட்டது அவர்களால் இந்தச்செய்தியை நம்ப முடியவில்லை. அண்ணாமலைப் பண்டிதர் ஜமீந்தாரைக் கடனாளியாக்கி யிருப்பார் என்பது பொருத்தமாகத் தெரியவில்லை.

'ஊரில் பேசுவதெல்லாம் உள்ளபடி யாயிருக்கும்? யாரோ ஜமீந்தாரும் பண்டிதரும் நட்பாயிருப்பதைப் பிடிக் காமல் கதை கட்டிவிட்டிருக்கிறார்கள்!" என்று அந்தப் பேச்சுக்கே முற்றுப் புள்ளி வைத்தாள்.

ஆனால், அதன் பிறகு நெடு நாட் களாகத் தங்கத்திற்கு ஜமீந்தார் வீட்டிலிருந்து அழைப்பு வரவேயில்லை யென்பது குறிப்பிடத்தக்கது. ஒரு நாள் கந்தசாமி வாத்தியார் பள்ளிக் கூடத்திலிருந்து திரும்பி வந்ததும், தான் அன்று வாங்கிய சம்பளப் பணத்தை மரகத அம்மாளிடம் கொடுத்து, "மரகதம், இந்த மாதம் தான் நமக்கு அதிகச் செலவில்லையே! இந்தப் பணத்தில் கொஞ்சத்தை எடுத்து - கதலிப்பட்டணத்துக்குப் போய் உனக்கும் தங்கத்துக்கும் சேலை யெடுத்துக்கொண்டு வாருங்களேன்!" என்று சொன்னார்.

இன்பத்திலும் சரி, துன்பத்திலும் சரி கந்தசாமி வாத்தியார் சொன்னால் சொன்னதுதான். மரகத அம்மாள் அவர் கூறியபடிதான் நடப்பாள். அது தான் தன் கடமை என்று நினைக்கும் பெண்மணி அவள்.

மறுநாள் கந்தசாமி வாத்தியார் பள்ளிக்கூடத்திற்குச் சென்றவுடன், மரகத அம்மாள் தங்கத்தையழைத்துக் கொண்டு பஸ்ஸில் கதலிப்பட்டணத் துக்குப் புறப்பட்டாள். தங்கம், ராதா வையும் அழைத்துக்கொண்டு போவோம் என்று கூறியதன் பேரில், அவளையும் கூடக் கூட்டிக்கொண்டு சென்றார்கள். மூவரும் கதலிப்பட்டணம் வந்து, துணிமணிக் கடைகளையெல் லாம் பார்த்துத் தங்களுக்கு வேண்டிய சேலை துணிமணிகளை வாங்கிக்கொண் டார்கள். திரும்பவும் நெய்யூருக்கு அன்று மாலையில் 4 மணிக்குத்தான் பஸ் இருந்தது, அதுவரை என்ன செய்வது என்று அவர்களுக்குப் புரிய வில்லை. கதலிப்பட்டணம், கோயிலுக் குப் போய் வரலாம் என்று மரகத அம்மாள் கூறினாள். ராதா குறுக்கிட்டு, "அம்மா! நான் இவ்வூர் ஜமீந்தார் மாளி கையைப் பார்த்ததேயில்லை. அங்கே போய்த் திரும்பலாமே!" என்றாள், மரகத அம்மாளுக்கு இது சம்மத மில்லை. ஒருவர் வீட்டுக்கு அழையாமற் போய் உபசாரம்பெறுவது அவளுக்குச் சிறிதுகூடப் பிடியாது. ஆனால், தங்கம், ராதாவுடன் சேர்ந்துகொண்டு, "ஆமா, அம்மா! அங்கே போய் வரலாம். அவர்கள் நல்லவர்கள். அப்படியெல் லாம் நினைக்கமாட்டார்கள். நாம் போனால், பெருமைப்பட்டுக்கொள்வார் கள்!" என்று சொன்னாள். சிறியவர் களான அந்தப் பெண்களின் ஆசை யைக் கெடுக்க வேண்டாம் என்று மரகத அம்மாள் அவர்களுடைய பேச் சுக்கு உடன்பட்டாள்.

அவர்கள் மூவரும் ஜமீந்தார் வீட்டை நோக்கி நடந்தார்கள். வழியில் ஒரு சாப்பாட்டுக் கடையிருந்தது. சாப் பாட்டு நேரத்தில் போய் அவர்களுக்குத் துன்பம் கொடுக்கக் கூடாது, இங்கே யே சாப்பிட்டுவிட்டுப் போய் விடுவோம் என்று சொன்னாள் மரகதம்மாள்.

"அங்கே போய் அவர்கள் சாப் பிடச் சொல்லி நாம் மறுத்துரைத்தால் வருத்தப்பட மாட்டார்களா?" என்று தங்கம் கேட்டாள்.

"அப்படிச் சொன்னால், மாலையில் காப்பி மட்டும் சாப்பிட்டுவிட்டு வரலாம். இப்போது நாம் சாப்பிட்டு விட்டுப் போவது தான் நல்லது" என்று மரகத அம்மாள் திரும்பவும் கூறினாள்.

தங்கம் ஒருத்திதான் ஜமீந்தார் வீட் டுக்கு அறிமுகமானவள். ஆகவே, ராதாவும் சாப்பாட்டுக்குப் பிறகு அங்கு போவது தான் நல்லதென்று எண்ணி னாள். ஆகவே, அவர்கள் சாப்பாட்டுக் கடையில் நுழைந்து பெண்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பகுதிக்குள் சென்று சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தார்கள்.

சாப்பிட்டுவிட்டு வெயிலில் நடப்பது கஷ்டமாயிருந்தது. இருந்தாலும் "இதோ வந்துவிட்டது! அதோ வந்து விட்டது!" என்று சொல்லிக் கொண் டே வீதிகளைக் கடந்து கடைசியில் ஜமீந்தார் வீட்டு மாளிகையை அடைந் தார்கள்.

அங்கே போய்ச் சேர்ந்ததும் தங்கத் திற்கு யாரோ அவள் இதயத்தில் சம் மட்டி கொண்டு அடிப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. மரகத அம்மா ளும் திகைப்படைந்து போனாள். ராதா வால் பேசவே முடியவில்லை.

ஜமீந்தார் வீட்டு காம்பவுண்டு வாசல் கம்பிக் கதவு இழுத்துப்பூட்டப் பட்டுக் கிடந்தது. உள்ளே எட்டிப் பார்த்த போது மாளிகை முன் கதவும் சாத்தப்பட்டிருந்தது. உள்ளே ஆள் நடமாட்டமே தென்படவில்லை. மூன்று பெண்களும் மூச்சுப்பேச்சில்லாமல் திகைப்புடன் அதைப்பார்த்துப் பிரமித் துப் போய் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் திகைப்படங்க அதிக நேரம் பிடித்தது.

பிரமித்துப்போய் நின்று கொண் டிருந்த அவர்கள் யாரோ ஒரு கிழவ னுடைய குரல் கேட்டுத் திரும்பிப்பார்த் தார்கள்.

"தங்கம்மா! எங்கே வந்தீங்க?" என்று அந்தக் கிழவன் கேட்டான். அவன் கையில் செடிகளுக்குத் தண் ணீர் ஊற்றும் பூவாளி இருந்தது. அவன் ஜமீந்தார் வீட்டுத் தோட்டக் காரன் என்று அவனைப் பார்த்தவுடன் தங்கம் தெரிந்து கொண்டாள்.

"தோட்டக்கார ஐயா, ஜமீந்தார் வீடு இங்கே இல்லையா?" என்று கேட்டாள் தங்கம்.

"பட்டணத்துக்குப் போயிருக்காங்க அம்மா!" என்றான் கிழவன்

"எப்போ வருவார்கள்?'

'என்னம்மா இப்படிக்கேக்கறீங்க? உங்களுக்கு உண்மையிலேயே தெரியா தா? ஐயாதான் இந்த அரண்மனையை வித்துட்டாங்களே! இனிமே பட்டண த்துலே தான் இருப்பாங்க!" என்றான் தோட்டக்காரக் கிழவன்.

"உண்மை தானா? எனக்குத் தெரி யாதே! விலைக்கு வாங்கியவங்க யாரு தெரியுமா?"

"அதாம்மா தெரியலே யாரோ பட்டணத்துலே யிருக்கறவங்க வாங்கி யிருக்கராங்கன்னு பேசிக் கிறாங்க!" என்றான் கிழவன்.

"மாளிகையப்பார்த்துக் கொள்ள ஆளு யாரும் இல்லையா?"

"நான்தாம்மா சாவியெல்லாம் வைத் திருக்கிறேன். ஜமீந்தாரையா போன போது சாவியையெல்லாம் என்கிட்டேக் கொடுத்துட்டுப்போனாரம்மா!" என்றான் கிழவன்.

தங்கம் அவன் சொன்னதையெல் லாம் வியப்புடன் கேட்டுக் கொண்டிருந் தாள்.

'ஏம்மா, வெயிலிலே நிக்கிறீங்களே, உள்ளே வந்து உட்காருங்க!' என்று சொல்லிக் கம்பிக் கதவைத்திறந்தான் சுப்பையாக் கிழவன்.

"இல்லே, போய் வருகிறோம்" என்றாள் தங்கம்.

"தங்கம், சாவிதான் இவரிடம் இருக் கிறதே! நாம் மாளிகையை ஒருமுறை சுற்றிப் பார்த்துவிட்டுப் போனால் என்ன?" என்று ராதாகேட்டாள்.

தோட்டக்காரக் கிழவன் சுப்பையா வும் வற்புறுத்தவே, அவர்கள் மூவரும் மாளிகைக்குள் நுழைந்தார்கள். தோட்டக்காரன் தன் வீட்டிலிருந்து அவர்களுக்குக் குடிக்க நீர் கொண்டு வந்து கொடுத்தான். மாளிகை முழுவ தும் திறந்து காண்பித்தான்.

மரகத அம்மாளும், ராதாவும வியப் புடன் மாளிகையைச் சுற்றிப்பார்த்துக் கொண்டு வந்தார்கள். மாளிகையின் ஒரு பெரிய கூடத்தின் நடுவில் சுவரில் மாட்டியிருந்த ஒரு பெண்மணியின் படத்தைப் பார்த்ததும், "அம்மா!" என்று கதறிக்கொண்டே அதை நோக்கி ஓடினாள் மரகத அம்மாள், பிறகு அதைப் பார்த்தபடி நின்று கொண்டே மாலை மாலையாகக் கண்ணீர் கொட்டினாள்.

தொடரும்

தமிழகத்தில் விடுதலை வேட்கை வீறிட்டெழப் பாட்டுப் பாடிய மாக் கவிஞன் பாரதி விழா நாளை (11-9-60) நாடெங்கும் நடைபெறுகிறது. பாரதியின் உருவத்தை அஞ்சல் தலையாக இந்திய அரசினர் நாளை வெளியிடுகிறார்கள், இதற்காக அவர்களைப் பாராட்டுகிறோம். வாழ்க பாரதி!



விரைவில் வெளிவருகிறது.

கண்ணதாசன்

கட்டுரைகள், - கதைகள், - நாடகங்கள்

★ சித்தத்தை மகிழ்விக்கும் தத்துவக் கட்டுரைகள்

★ தித்திக்கும் சுவைசேர்க்கும் தென்பாங்குச் சிறுகதைகள்

★ சித்திரத் தமிழ்வடிக்கும் சிறப்புமிகு நாடகங்கள்

விவரங்கட்கு:

தென்றல், சென்னை-6.

செய்திச் சுழல்

இட்லி தோசை இந்திரா காந்தி

அகில இந்திய காங்கிரஸ் பெண்கள் மாநாட்டிலே தலைமையேற்றிருந்த திருமதி இந்திரா காந்தி ஒற்றுமையைப் பற்றி மிக அழகாகப் பேசியிருக்கிறார். ஒவ்வொரு வட இந்தியரும் ஒரு தென்னிந்திய மொழியையும் ஒவ்வொரு தென்னிந்தியரும் ஒரு வடஇந்திய மொழியையும் கற்கவேண்டும் என்று ஓர் அரிய யோசனையைக் கூறியிருக்கிறார். காங்கிரஸ்காரர்கள் வர வரத் தங்கள் மூளையை விசித்திரமாகத் தீட்டிக்கொண்டு வருகிறார்கள். திருமதி இந்திரா காந்தி அதற்கு விதிவிலக்கென்று சொல்லிவிட முடியுமா? எல்லோரும் கத்தியைஒருக்களித்துக் கூர்மையாகும்படி சாணைக்கல்லில் வைத்துத் தீட்டுவார்கள். ஆனால், நமது காங்கிரசுக்காரர்கள் அதிலும் அகில இந்திய காங்கிரஸ்காரர்கள் கூர்மையான பாகத்தைச் சாணைக் கல்லுக்கு நேரே செங்குத்தாய்ப் பிடித்துக்கொண்டு தீட்டுவதிலே மகா மகா கைகாரர்களாயிருக்கிறார்கள்.

திருமதி இந்திரா காந்தி சொல்லுகிறபடி ஒரு தமிழர் வங்காளி மொழியையும், ஒரு தெலுங்கர் மராட்டி மொழியையும், ஒரு மலையாளி பஞ்சாபியையும், ஒரு கன்னடியர் இந்தி மொழியையும், அதுபோலவே ஒரு வங்காளி தெலுங்கையும், ஒரு குஜராத்தி தமிழ்மொழியையும், ஒரு மார்வாரி கன்னடத்தையும், ஒரு பீகாரி மலையாளத்தையும் கற்றுக்கொள்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். இவர்கள் எல்லோரும் சேர்ந்து எப்படி ஒற்றுமையாக வாழ்வார்கள் என்பது நமக்குப் புரியவில்லை.

ஏதோ தாங்கள் பெரிய புத்திசாலிகள் என்று நினைத்துக்கொண்டு வடநாட்டார்கள் தென்னாட்டார்களுக்கு உபதேசம் புரியவருகிறது இப்போது ஒரு வழக்கமாக ஆகிவிட்டது; நாகரிகம் அல்லது பேஷனுகக்கூட ஆகிவிட்டது என்று சொல்லலாம். முதலில் இப்படிப் உபதேசிப்பார்கள், பிறகு கிட்ட நெருங்கிப் போனால், தென்னாட்டார்கற்றுக்கொள்கிறஅந்த வடமொழி இந்தியாக இருக்கட்டுமே என்று புதிதாக உபதேசம் செய்வார்கள். இப்படியாக இந்தி ஏகாதிபத்தியத்துக்குப் படிப்படியாக நம்மைத் தயார்ப்படுத்துவதாகஅவர்களுடைய எண்ணம்.

இந்திரா காந்தி இன்னோர் உதாரணமும், கூறினார். ஆகா அதன் நயத்தை என்னென்று சொல்வேன். ஷேக்ஸ்பியரோ மில்டனோ இப்போது இருந்தால் இந்த மாதர் குலதிலகத்தின் உதாரணத்தைக் கேட்டுவிட்டு உடனே செத்துப் போய்விடுவார்கள். அப்படிப்பட்ட உதாரணம் இது. ஒற்றுமையை வளர்க்க எத்தனையோ அம்சங்கள் இருக்கின்றனவாம். அவற்றை மேற்கொள்ள வேண்டுமாம். அதற்கு உதாரணமாக உணவு வகைகளைக் குறிப்பிடலாமாம். சில ஆண்டுகளுக்கு முன்னால், இட்லி தோசை போன்ற பலகாரங்கள் வட இந்தியாவுக்கு அன்னியமாயிருந்தனவாம். ஆனால் இப்போது அவை பிரபலமாகிவிட்டனவாம்.

இந்த ஞானக்கொழுந்து அம்மையாரின் உதாரணம் எப்படி? இட்லி தோசையை நாங்கள் ஏற்றுக்கொண்டுவிட்டோம்; தென்னிந்தியர்களே! சப்பாத்தியையும் இந்தியையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று எவ்வளவு சூசகமாகச் சொல்லிவிட்டார் பார்த்தீர்களா?

இங்கேயுள்ள காங்கிரஸ் பொம்மைகள் தலையாட்டிக்கொண்டிருக்கும் வரையிலே இப்படிப்பட்ட ஞானக்கொழுந்துகளின் உபதேசங்கள் வடக்கேயிருந்து வருவது குறையாதென்று உறுதியாகக் கூறலாம்.

தமிழ்நாட்டிற்கு திபேத் அகதிகள்

திபேத்திலிருந்து வந்திருக்கும் அகதிகளைத் தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தில் உள்ள நீலகிரியில் குடியேற்ற அரசாங்கம் ஆலோசித்து வருகிறது என்று பண்டிதர் நேரு டெல்லிச் சட்ட சபையில் கூறியிருக்கிறாராம்.

இந்திய அரசாங்கம் தமிழர்களைப் பற்றி என்ன நினைத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள இந்தச் செய்தியும் பயன்படுகிறது. பர்மா, மலாயா, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் தமிழர்படும் அவதிகளைப் பற்றிக் கேள்விப்பட்டும் அறிந்தும் பேசாமல் இருக்கின்ற நேருவும் அவருடைய அரசாங்கமும், பர்மாவிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்படுகின்ற இந்தியர்கள் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்று கருத்துத் தெரிவிக்கின்ற நேருவும் அவருடைய அரசாங்கமும் திபேத் அகதிகளுக்காக இவ்வளவு கவலைப்படுவது-காணும்போது எவ்வள்வு ஓரவஞ்சகமான நெஞ்சுடையவர்கள் என்று தெரிந்துகொள்ள முடிகிறது. தமிழன், தமிழ்நாட்டிலே பிழைக்கமுடியாமல் எங்கெங்கோபோய் எப்படியெப்படியோ அவதிப்பட்டுச் சாகிறான். கள்ளத்தோணியிலும் செல்லுகிறான். மரத்தடிகளிலும் நடைபாதையோரங்களிலும் வாழுகின்ற மக்கள் இங்கே ஏராளமாக இருக்கிறார்கள். இவர்கள் வாழ்வுக்கு வழிவகுக்காத இந்தத் தில்லி அரசாங்கம் எங்கோ திபேத்திலிருந்து வருகின்ற அகதிகளுக்கு இங்கே தமிழ்நாட்டில் ஊர் உண்டாக்கிக் கொடுக்க ஏற்பாடு செய்கிறது இந்தக் குடியேற்றங்கள் தொடர்ந்து நடைபெறுமானால் நாளைக்குத் தமிழ்நாட்டைத் தமிழன் தன் நாடு என்று சொல்லிக்கொள்ள முடியாது. தமிழரினமும், இந்தத் தமிழ்நாட்டிலே ஒரு நல்ல வளமான நிலையை உருவாக்கிக்கொள்ள முடியாமற் போகும். எப்போது எந்த முறையில் எங்கிருந்து என்ன காரணத்தைச் சொல்லிக்கொண்டு யார் குடியேற முன் வந்தாலும் தமிழ்நாட்டில் இடங் கொடுப்பது தமிழர்கள் தங்கள் தலையில் கொள்ளி வைத்துக்கொள்வதற்கு ஒப்பாகும். ஆகவே, எல்லாத் தமிழ் மக்களும் ஒன்று சேர்ந்து இந்தக் குடியேற்றத்தை எதிர்த்துத் தில்லி யரசாங்கத்துக்குத் தீர்மானம் செய்தனுப்ப வேண்டும்.

திராவிட நாடு நம் கையில் இருந்தால், திபேத்திலிருந்து வருகிற இந்த அகதிகளை நம்முடைய அனுமதியில்லாமல் இங்கே நேரு கொண்டு வந்து இறக்கிவிட முடியுமா? இப்போது இந்த நாடு அவர்கள் கையில் இருப்பதால் தானே நாதி கெட்ட முறையில் நடத்தப்படுகிறது. எங்கெங்கிருந்தோ வருகிறவனெல்லாம் இந்த நாட்டைச் சுரண்டிப் போகவும், எங்கெங்கிருந்தோ வாழ முடியாமல் வருகிறவன் எல்லாம் இங்கே வந்து வளமான வாழ்வு பெறவும், இந்த மண்ணிலே பிறந்தவன் நாதியற்ற முறையில் பிழைக்க வழி தெரியாமல் சாவதும் ஏன் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும், ஏக இந்தியா ஏக இந்தியா என்று பேசுவதாலும், பேசுவோரை நம்புவதாலும் தான் நாம் இக்கதிக்கு வந்தோம் என்பதை அறிய வேண்டும்.

திருமண வாழ்த்து

காரைக்குடி திரு. பா. மதியரசன் என்கிற சோமசுந்தரம்அவகளுக்கும் நல்லுக்குறிச்சி திரு ஆ. இராமசாமியாரின் மகள் திரு. தெய்வானைக்கும் 2-9-60 ம் நாளன்று தமிழ்த் திருமணம் நடைபெற்றது. மணமக்களுக்கு நமது வாழ்த்துக்கள்!

வீண் செலவு! வேண்டாத ஆராய்ச்சி

இளம் பெண்களுக்குச் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்வது பற்றி இந்திய அரசினர், ஐதராபாத்திலும் பம்பாயிலும் ஆராய்ச்சி நடத்தி வருகிறார்களாம். எது எது நாட்டுக்குத் தேவையோ அந்த ஆராய்ச்சிகளில் சரிவரக் கவனம் செலுத்தாத இந்திய அரசினர் இதுபோன்ற-அக்கிரமமான- அனாசாரமான ஆராய்ச்சிகளில் ஏன்தான் ஈடுபட வேண்டுமோ தெரியவில்லை.

ஆந்திரப் பிரதேச சர்க்காரால் நடத்தப்படுகிற ஹைதராபாத் குடும்ப க்ஷேமநல நிலையத்தில் கணவருடைய விந்துவைக் கொண்டும் வேறு நபரின் விந்துவைக் கொண்டும் செயற்கைக் கருத்தரிப்பு நடைபெறுவதாகவும், இந்திய குடும்பக் கட்டுப்பாட்டு சங்கம் பம்பாயில் நடத்தி வருகிற குடும்ப க்ஷேமநல ப்யூரோவில் கணவர்களுடைய விந்துவைக் கொண்டு செயற்கைக் கருத்தரிப்பு நடைபெறுவதாகவும் தெரிய வருவதாக சுகாதார மந்திரி திரு. டி. பீ. கர்மார்க்கர் மக்கள் சபையில் கூறினார்.

ஹைதராபாத் நிலையத்தில் சென்ற மூன்று வருஷங்களில் நடத்தப்பட்ட செயற்கைக் கருத்தரிப்பு ஏற்பாட்டில் 13 பேரில் மூன்று பேர் கருத்தரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருப்பதாகவும், பம்பாய் ப்யூரோவில் 139 பேரில் 13 பேர் கருத்தரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் மந்திரி அறிவித்தார்.

ஒரு புறம் நாட்டிலே மக்கள் தொகை பெருகி வருவதைத் தடுக்க கருத்தடை முறையைப் பலப்படுத்தவும் விரிவுபடுத்தவும் நடவடிக்கை எடுத்து வரும் இந்த இந்திய அரசினர், செயற்கைக் கருத்தரிக்கும் முறைபற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டியது ஏன்?

பஞ்சம், பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய பயங்கர நிலைமைகளைச் சமாளிக்க வகையில்லாத இந்திய அரசு இதுபோன்ற-நாகரிகத்திற்கு மாறுபட்ட ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருவது வீண் செலவு என்று மட்டுமல்ல-ஒழுக்கங்கெட்டதனம் என்றும் சொல்லத்தான் வேண்டும். வேண்டாம் இந்த ஆராய்ச்சி என்று ஆள வந்தோரைக் கேட்டுக்கொள்கிறோம்.

சட்ட விரோதமாகக் காவலில் வைக்கப்பட்டவர் சாவு.

கடந்த 5-5-60-ல் நெல்லிக்குப்பம் போலீஸ் நிலயத்தில் இருந்த மரம் ஒன்றில் முருகேசன் என்ற இளைஞர் ஒருவருடைய பிணம் தொங்கிக்கொண்டிருந்தது. விசாரணை நடத்தியதில் அந்த இளைஞர் 1-5-60 லிருந்து 4-5-60 வரை போலீஸ் ஸ்டேஷனில் சட்ட விரோதமாக அடைத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வந்தது. இந்த வழக்கை விசாரித்த கடலூர் மாவட்ட மாஜிஸ்ட்ரேட் திரு. வி. பலராமையா-மேற்படி குற்றத்திற்காக சப் இன்ஸ்பெக்டர் பி. கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு ரூ. 500/ அபராதம் விதித்தார். கட்டத் தவறினால் 2 மாதக் கடுங்காவல் தண்டனை அனுபவிக்கக் கட்டளையிட்டார். அதுபோல ஹெட் கான்ஸ்டபிள் டி. வி. கிருஷ்ணசாமி என்பவருக்கு ரூ 200/-அபராதம் விதித்தார். கட்டத் தவறினால் ஆறு வாரம் கடுங்காவல் தண்டனை அனுபவிக்கும்படி உத்தரவிட்டார்

மறைவு

தி. மு. க. முதுகுளத்தூர் வட்டச் செயலாளர் திரு. செ. அழகர் சாமி அவர்களின் தாயார் முனியம்மாள் அவர்கள் 31-8 60 அன்று தமது 50-வது வயதில் இயற்கை யடைந்தார்கள் என்ற செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். அன்னையை இழந்து வாடும் திரு அழகர் சாமிக்கும், அவளுடைய குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

காந்தியாருக்குத் நாம் தந்த காணிக்கை

நள்ளிரவிலே காமராசர்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில் இலட்சியவாதிகளின் இதயங்களைத் துடிக்கச் செய்யும் பலிபீடங்கள் பலவகையிலும் உருவிலும் தோன்றியுள்ளன. குடந்தைத் தோழர் இராமலிங்கம் காங்கிரசுக் கட்சியின் பொதுக்கூட்டத்திலே அடிபட்டு காங்கிரசுக் கட்சி நடத்துகின்ற சர்க்காரின் காவல் நிலையத்தில்—மருத்துவமனையில் சாகடிக்கப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டபோது பழைய நிகழ்ச்சிகள் என்றாலும் இதயத்தில் இரத்தப் புண்ணாக இருப்பவர்கள் மீண்டும் நம் நினைவுக்கு வருகின்றன. நாம் கழகம் கண்டு, கனிகுலுங்கும் கருத் தோவியச் சோலையாகத் திராவிடத்தை மாற்றுவோம் என்று பணி துவங்கிய நேரத்தில் கழகத்தின் காவலராம் நாவலர் அவர்கள் தேனி நகரப் பொதுக்கூட்டத்தில் தாக்கப்பட்டார். அவர் பேசவிருந்த பொதுக்கூட்ட மேடைக்கு அருகிலேயே தேசீயவாதிகள் எனப்படுவோரின் கையாட்கள் வேறோர் மேடை அமைத்து இடையூறு செய்தனர். பேசவந்த நெடுஞ்செழியன்மீது பெரியதோர் கல்லைத்தூக்கிப் போட்டு கொன்றுவிட காலி ஒருவன் முன்வந்தான். கூட்டத்திலே அமளியும் அலங்கோலமும் ஓலமிட்டன! தேனி நகர காங்கிரசுக் கமிட்டிதான் சதிக் கூடாரமாக இருந்தது. சதிக்கூட்டத்தின் தலைவர்களாக என் ஆர். தியாகராசனும் சக்திவடிவேல் என்ற பாராளுமன்ற உறுப்பினரும் இருந்தார்கள்! வெளியூர் குண்டர்களையும் ரௌடிகளையும் அழைத்துவந்து காங்கிரஸ் கமிட்டியின் அலுவலகத்திலேயே வைத்திருந்தார்கள் இவைகளையெல்லாம் முன்கூட்டியே அறிந்துகொண்ட போலீசார்-காவல் துறை அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுத்தனர். கலகத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். என். ஆர். தியாகராசன் என்ற இப்போதைய எம். எல். ஏ. அன்றைய தினம் சிறையிலே அடைக்கப்பட்டார் தனது கூட்டாளிகளுடன்! தமிழ் நாட்டுக் காங்கிரசின் தலைவராக இருந்த காமராசர் நள்ளிரவிலே அங்கே வந்து அதிகாரிகளை தேனிக் கலகத்தில் கைது செய்யப்பட்டவர்களை உடனே விடுவிக்க வேண்டுமென்று மிரட்டினார். நீதிபதி மிரளவில்லை காமராசரின்குரலுக்கு இசையவில்லை! குற்றவாளிகளை விடுவிக்கவும் மறுத்துவிட்டார்! அப்போது மதுரை மாவட்டத்தின் கலெக்டராக இருந்த வெள்ளையரான மோரிஸ் என்பவர் தக்க பாதுகாப்புகளுடன் சிறந்த நடவடிக்கைகளை எடுத்தார். பெருங்கலவரத்தைத் திறம்படச் சமாளித்த நீதிபதியையும் காவல் துறை அதிகாரிகளையும் பாராட்டினார்! காங்கிரசுக்காரர்களின் கயமைத்தன அரசியலுக்கு அதிகாரிகள் பலியாக மாட்டார்கள் என்ற எண்ணத்துடன் செயல்பட்டார் விசாரணையைத் துவக்கினார்!

கலெக்டர் மோரிசும் காங்கிரஸ் சர்க்காரும்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிறந்த தொண்டரான குடந்தை இராமலிங்கம் கொல்லப்பட்டது குறித்து நீதிமன்ற விசாரணை வேண்டுமென்று கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பிக் கேட்டபோது சர்க்கார் இசைவு தரவில்லை. கூட்டத்தில் குழப்பம் விளைவித்திருப்பின் அடிபட்டுச் செத்திருப்பான் என்று எப்போதும் ஊமையாக இருக்கும் முதலமைச்சர் முணகியிருக்கிறார். நீதிபதியின் முன்னிலையில் மரண வாக்குமூலம் ஏன் வாங்கவில்லை என்று கேட்டால சரியான பதிலுரை தர முடியவில்லை மந்திரியால்! அப்போது வரை கழகத் தோழர் ஒருவர் கொல்லப்பட்டதை ஒரு கொடுமையான நிகழ்ச்சியாகக்கூட அவர் கருதவில்லை! ரஷ்யாவுக்குப் போயிருந்தபோது குதிரைப்பால் குடிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தினார்களாம்-இவர் குடிக்கவில்லையாம். ஆனால் கொஞ்சம் ருசி பார்த்தாராம்! அந்தக் குதிரைப்பால் மயக்கத்திலேயே சட்ட மன்றத்தில் இராமலிங்கம் கொலையை விவாதிக்க மறுத்துவிட்டார்! ரெவின்யூ டிவிசனல் அதிகாரி எனப்படுபவர் விசாரிப்பார் என்று முடிவு செய்து அதன்படி கிருட்டிணராஜ் என்ற குடந்தை R. D. O. சர்க்காரின் ஆய்வுரைப்படி தகவல்கள் சரியான சான்றுகள் தேடிக்கொண்டிருக்கிறாராம்! கழகத்தவரும் பொதுமக்களும் மாற்றுக் கட்சியினரும் இந்த நேரத்தில் தேனீ கலவர வழக்கினை, அதிலே அதிகாரிகள் பழிவாங்கப்பட்டதை எண்ணிக் கொள்ள வேண்டும். அதிகாரிகள் விசாரணை-குடந்தை ஆர். டி. ஓ. உடைய விசாரணை உண்மையைக் கண்டு தர இயலாது என்பதனை மிகத் தெளிவாக உணரலாம்! 1951-ல் மதுரை மாவட்டக் கலெக்டர் மோரிஸ் எடுத்த சரியான நடவடிக்கைகளை குமாரசாமிராசாவை முதலமைச்சராகக் கொண்டிருந்த சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. அவைகளை அப்புறப்படுத்திவிட்டுச் சென்னையிலிருந்து தனிப்பட்ட அதிகாரி ஒருவர் அனுப்பப்பட்டு அறிக்கை தயாரிசகும்படி நியமிக்கப்பட்டார்! சட்டத்தின்படி சரியான நடவடிக்கை எடுத்த நீதிபதி வெங்கடாசலம் என்பவரும், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இராமனாதன் என்பவரும் மற்றும் நான்கு போலீசாரும் பதவியினின்றும் நீக்கி வைக்கப்பட்டனர்! தன்னுடைய அதிகார வரம்பில் குறுக்கிட்டமைக்காக வருந்தி கலெக்டர் மோரீஸ் என்பவர் தன்னுடைய பதவி விலகல் கடிதத்தினை குமாரசாமி ராசாவின் சர்க்காருக்குத் தந்துவிட்டு இவர்களின் நேர்மையற்ற தன்மையை விளக்கினார்!

பதவியுயர்வை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஆர். டி. ஓ

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பழி தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற சதித் திட்டத்தின்படி தமிழ் நாட்டுத் தலைவர் காமராசரும்-முதலமைச்சர் குமாரசாமி ராசாவும் தலையிட்டு அதிகாரிகளை நீக்கி வைத்தார்கள்! நிர்வாகத் திறம் படைத்த சிறந்தவரான ஒரு கலெக்டர் இவர்களைக் காண வெட்கப்பட்டு விலகிக்கொண்டார்! நீதிபதியின் விசாரணையைத் தூக்கி எறிந்துவிட்டார்கள்! அதே காமராசர் இப்போது முதலமைச்சராக இருக்கிறார். இவருடைய சர்க்காரில் ஒரு அதிகாரியாக-பதவி உயர்வினை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பலரில் ஒருவராக இருக்கும் குடந்தை ஆர். டி. ஓ. இராமலிங்கத்தின் கொலையினைப் பற்றி நல்ல தீர்ப்பு வழங்கமுடியுமா? அவருடைய விசாரணையை கழகத் தோழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால் சர்க்காரின் நேர்மைக்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? போலீசு இன்ஸ்பெக்டர் ஜெனரல் இராசரத்தினம் மீது அன்பழகன் சட்டமன்றத்தில் புகார் செய்தார்-நீதிபதி பி. என். இராமசாமி என்பவர் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவர் ஒரு நீதிபதியாக இருந்து விசாரிக்காமல் சர்க்காரின் ஆய்வுரைகளின்படி தன்னுடைய விசாரணையை நடத்தினார். அவரது தீர்ப்பினை மிகச் சரியென்று சர்க்கார் ஏற்றுக்கொண்டதற்குக் காரணம்-இவர்கள் சொல்லியபடி அவர் நடந்துகொண்டதால்! 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் பி. பாலசுப்பிரமணியம், பி. என். இராமசாமியின் தவறான அறிக்கைகளையெல்லாம் தன்னுடைய இதழிலே மிகச் சிறந்த கட்டுரைகளாக விளக்கிக் காட்டி ராசரத்தினம் அவர்கள் மீது பல சிறந்த சான்றுகளுடன் உறுதிப்படுத்தினார். ஆனால் சர்க்கார் சரியான அறிக்கை தயாரிக்கும் ஒரு நீதிபதியை ஏற்றுக்கொள்ளவில்லை. நேர்மையைப் பல நேரங்களில் பங்கப்படுத்திப் பலியிட்டுக்கொண்டவர்கள் மீண்டும் ஆர். டி. ஓ. என்ற அதிகாரிதான் இராமலிங்கம் கொல்லப்பட்டதை விசாரிப்பார் என்றால் எவரேனும் ஏற்றுக்கொள்வாரா? சர்க்காருடைய கட்டளைக்குக் கட்டுப்படத் தேவையல்லாத உயர் நீதிமன்றதது நீதிபதி ஒருவரால் இந்தப் படுகொலை நிகழ்ச்சி விசாரிக்கப்பட வேண்டும்

கூடலரசன்

என்ற கழகத்தின் குரலுக்கு சர்க்கார் இணங்க மறுப்பது தங்களுடைய கட்சிக்காரர்களின் கயமைத்தனமும் காலித்தனமும் வெளியாகும் என்ற பயத்தால்தான்!

சர்க்கார் எப்போது தவற்றை ஒப்புக் கொண்டது?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சிய வளர்ச்சியைத்தடுப்பதற்கு இராமலிங்கம் போன்றவர்களைக் கொன்றுவிடுவதுதான் காங்கிரசுக் கமிட்டிகளும் அந்தக் கமிட்டிகளைக் கட்டிக்காக்கும் மந்திரிகளும் வைத்துள்ள திட்டமா குடந்தை இராமலிங்கம் மூட்டைப்பூச்சி மருந்து தின்றார் என்பதை நம்ப முடியுமா? மூட்டைப்பூச்சி மருந்து தின்றுவிட்டுப் பொதுக்கூட்டத்திலே குழப்பம் செய்யும் சக்தி இருக்குமா? தெளிவான குரலில் கேள்வி கேட்க முடியுமா? இதனை கலைஞர் கருணாநிதி அவர்கள் சட்டமன்றத்தில் கேட்டபோது அமைச்சர்கள் பதில் பேசவில்லை! இந்த சர்க்கார் எப்போது தன்னுடையதவற்றை ஒப்புக்கொண்டது? ஆசைத் தம்பியைச் சிறையில் மொட்டையடித்து வேடிக்கை பார்த்தார்கள். கழகத்தவரை வேதனைப்படுத்தினார்கள்! பின்பு மொட்டையடிக்கவில்லை. என்று பொய்யுரைத்தார்கள்! புயல் நிவாரண நிதியாக முப்பது ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கைத்தறி ஆடைகளை மதியழகன் அவர்களிடம் சர்க்கார் சார்பில் ஒரு காரியதரிசி கையொப்பமிட்டுப்பெற்றுக்கொண்டு லாரியில் ஏற்றிச்சென்றார் அழகாக புகைப்படம் எடுத்துப் பத்திரிகையிலே வெளியிடப்பட்டது! சர்க்கார் கேவலத்தன்மை சட்ட சபையிலே வெளிப்பட்டது. கழகம் செய்த உதவியைப் பற்றி ஒரு உறுப்பினர் கணக்கு விபரம் கேட்டார் சர்க்கார் மிகத் தைரியமாக, கழகம் எந்த விதமான உதவியும் செய்யவில்லை என்று பொய்யுரைத்தது! செய்தி கேட்டவர்கள் ஆட்சியாளரின் கேவலத்தன்மை கண்டு நகைத்தார்கள்! இப்போது இராமலிங்கத்தைக் கொல்லவில்லை என்பதற்கு மூட்டைப் பூச்சி மருந்தைக் காட்டுகிறார்கள். இவர்களது நேர்மைக்கு இன்னும் எத்தனையோ சான்றுகள் சாட்சியங்களாக உள்ளன!

உணவு மந்திரியும் நூறு மூட்டை நெல்லும்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல்முறைகளைத் தடை செய்ய முடியாதவர்கள் சட்டத்துக்குப் பின்னே மறைவிடம் தேடிக்கொள்கிறார்கள். கையாட்களாக இருக்கும் அதிகாரிகள் கழகத் தோழர்களைப் பழிவாங்கவும் பலியிடவும் துடிக்கிறார்கள். இவர்களுடைய இழிசெயலுக்குத் துணையாக இந்தச் செய்தியையும் சேர்த்துக்கொள்ளலாம்! 1949-50 என்று எண்ணுகிறேன் நாடு கடுமையான உணவுப்பஞ்சத்தில் இருந்தபோது அப்போதைய உணவு மந்திரி டி. எஸ். எஸ். இராசன் என்பவருடைய மகன் நூறு மூட்டைகளுக்குமேல் நெல்லைப் பதுக்கி வைத்திருந்தார் என்ற செய்தியை அறிந்த திருச்சி மாவட்டக் கலெக்டர் அவைகளை கைப்பற்றும்படி கட்டளையிட்டார். மந்திரியின் மகன் மனங்குமுறி அழுதார். மந்திரி தலையிட்டார். கலெக்டருக்குச் சொன்னார் கைப்பற்றுதலைக் கைவிடும்படி! உணவு மந்திரியாக இருந்தவரே உணவுக் கட்டுப்பாட்டுக் கொள்கைக்கு 'உலை வைக்கும்' வகையில் கலெக்டரைக் கட்டாயப்படுத்தினார் கலெக்டர் தன்னுடைய கண்ணியத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக பதவி

—10-ம் பக்கம் பார்க்க—

வெண்பாப் போட்டி-6.

★

ஈற்றடி

பார்த்தானே பாவிப் பயல்.

இறுதி நாள் 24-9-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை 6.

சிறுகதை

சண்பகம்

நா. ஜகந்நாதன், எம். ஏ.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

சண்பகத்தின் தாய்க்குச் செய்தி எட்டியது. அவளால் நம்பவே முடியவில்லை. ஏன் தன் மகளைப் பள்ளிக்கு அனுப்பிவைத்தோம் என்று கவலையுற்றாள். சண்பகத்தை எப்படியாவது மெல்லப் பள்ளியிலிருந்து நிறுத்திவிட வேண்டும் என்று முடிவு செய்தாள். எப்படி நிறுத்தலாம் என்று சிந்திக்கத் தொடங்கினாள். பள்ளிக்கூடத்தில் படித்ததுபோதும், இனி வீட்டிலேயே படிக்கலாம் என்று சொல்லிப்பார்த்தாள். இன்னும் ஓராண்டுகூட முடியவில்லை, இதற்குள் எப்படி நிறுத்துவது என்று பதில் கூறினாள் சண்பகம். இன்னும் என்னென்னமோ கூறினாள் தாய். ஆனால் சண்பகமோ ஒவ்வொன்றிற்கும் தக்க பதில் சொல்லி வந்தாள். கடைசியில் பச்சையாகவே கேட்டாள் தாய், 'உன்னைப் பற்றிப் பலரும் பலவாறு பேசிக்கொள்கிறார்களே, அதற்காகவாவது நீ நின்றுவிடத்தான் வேண்டும்' என்றாள். "நான் இப்போது நின்றுவிட்டால் ஊரார் சொல்வது உண்மை என்றல்லவா ஆகிவிடும்?" என்று கூறித் தாயின் வாயை மூடினாள் சண்பகம்.

தாய்க்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. உடனே தன் கணவருக்கு ஒரு கடிதம் எழுதச் செய்வித்தாள். அதில் சண்பகத்தின் காதலைப் பற்றிக் கூறாமல், உடனே வந்து தன்னைப் பார்க்க வேண்டும் என்று மட்டும் எழுதச் செய்தாள். அவளே எழுதியிருந்தால், சண்பகத்தின் காதலைப் பற்றி எழுதியிருப்பாள் போலும்! சண்பகத்தின் தந்தை என்னமோ, ஏதோ என்று பதறிக்கொண்டு ஓடிவந்தார். செய்தியைக் கேட்டதும், கூறமுடியாத துக்கம் குடிகொண்டது அவர் முகத்தில். நமது சாதியிலேயே கிடையாதே, இதுபோன்ற நிகழ்ச்சி; நமது குலத்தின் விளக்கு, நமது குடிப்பெருமையையா குறைக்க வேண்டும்? என்று குமுறினார். நல்ல வேளை, சண்பகம் பள்ளிக்குப் போயிருந்தாள். இல்லையேல் நேருக்குநேர், பதில் கொடுத்திருப்பாள். அவள் வருவதற்குள் அவர் ஊருக்குப் புறப்பட முடிவு செய்தார். ஊருக்குச் சென்று, யோசனைகள் செய்து கடிதம் எழுதுவதாகக்கூறிச் சென்றார்.

ஊருக்குச் சென்ற அவர் யாரிடமும் ஒன்றும் கூறவில்லை, பேசவுமில்லை. தாமாகவே நீண்டநேரம் யோசனை செய்தார். ஆசார அநுஷ்டானங்களில் மிகவும் ஊன்றிப்போனவர்ஆதலால்,இந்தக் காதல்கதைக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும், இல்லையேல் இது மங்களகரமான திருமணத்தில்தான் முடியும் என்று அவருக்குத் தெரியும். தன்னுடைய சாதிப் பெருமையைக் காப்பதில் அவருக்கு இருந்த ஆர்வம், எப்படியும் இந்தக் காதல் செடியை வெட்டி எறிய வேண்டும் என்று முடிவு செய்யச் செய்தது. கடைசியில் பல நாட்கள் யோசனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, சண்பகத்தின் தாயாருக்கு ஒரு தந்தி வந்தது. அந்தத் தந்தியில் சண்பகத்தின் தந்தைக்கு உடல் அபாயகரமான நிலையில் இருப்பதாகவும், இருவரும் உடனே புறப்பட்டு வர வேண்டும் எனவும் கண்டிருந்தது. சண்பகத்தின் தாயாருக்கு, உண்மையிலேயே தன் கணவருக்கு உடல் நலம் இல்லையா, அல்லது சண்பகத்தை ஊரை விட்டுக் கிளப்ப இதுபோல் ஒரு தந்திரம் செய்திருக்கிறாரா என்பது புரியவில்லை. எப்படி இருந்தாலும் உடனே புறப்பட்டுப் போக வேண்டும் என்று முடிவு செய்தாள். சண்பகத்திற்குத் தன் தந்தை வந்து போனது தெரியாது ஆதலால், அவள் தந்தியைச் சந்தேகிக்க இடமில்லை. எனவே இருவரும் புறப்பட்டுச் சென்றனர். விரைவில் வந்துவிடுவோம் என்று தோன்றியதால் சண்பகம் ஆசிரியரிடம் விடைபெற்றுக்கொள்ளவில்லை; அதற்கு நேரமுமில்லை.

சண்பகத்தின் தந்தை அவர்கள் இருவரும் வீட்டிற்கு வந்தபோது, படுக்கையில் தான் இருந்தார். "சண்பகம்! வந்துவிட்டாயா" என்றார் ஆதுரத்தோடு. "அப்பா! வந்துவிட்டேன்!" என்றாள் சண்பகம் "அம்மா! நீ என்னைச் சாகடித்துவிட்டாய்! இன்னும் சில மணி நேரங்களில் என் உயிர் பிரிந்துவிடும்!" என்றார் தந்தை.

திருமண வாழ்த்து

மறைத்திரு மறைமலை அடிகளார் பேரனும், முன்னாள் சைவ சித்தாந்தக் கழக அமைச்சர் திரு. திருவரங்கனார் திருமகனாருமான திரு. வைரமுத்து எம். ஏ., அவர்கட்கும், புதுதில்லி செக்ஷன் ஆபீசர் திரு. வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள் திருமகளார் வை. பார்வதிக்கும் மதுரை நகர் மணமகள் இல்லத்தில், சார்வரி ஆண்டு ஆவணித் திங்கள் 13-ம் நாள் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

மணமக்கள்
பல்லாண்டு வாழ்க.

—9-ம் பக்கத் தொடர்ச்சி—

யிலிருந்து விலகிக்கொண்டார்! இப்போது டி. எஸ். எஸ். இராசனுடைய பங்காளிகள் குடந்தை இராமலிங்கம் கொலையினை ஒரு ஆர். டி. ஓ. விசாரிக்கும்போது சும்மா விட்டு வைப்பார்களா என்பதை எண்ணிப் பார்க்கும் எவரும் அவர்தம் சூழ்ச்சியை உணருவர்! இத்தகைய கடந்தகால நிகழ்ச்சிகளையெல்லாம் நினைவிலே வைத்திருக்கும் இந்தக் கால அதிகாரிகள் தங்களுடைய புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் பதவியைப் பலியிட்டுக்கொண்டு நேர்மையையும் நாணயத்தையும் புதைத்துக் கொள்கிறார்கள்! சாதாரணக் காங்கிரசுக்காரன்கூட கலெக்டரை மிரட்ட முடிகிறது. கலெக்டர்கள், டிப்டி கலெக்டர்கள், யாராக இருந்தாலும் காங்கிரஸ் பெரிய மனிதர்களைப் பகைத்துக்கொண்டால் பதவியில் ஒரே இடத்தில் நிலைக்க முடியவில்லை! எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத இடத்திற்கு மாற்றப்படுகிறார்கள்!

நெஞ்சுரமுள்ள நீதிபதி

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பகை வளர்த்திடும் ஆட்சியாளர்கள் கழகத் தொண்டர்களின் பிணங்களின் மீது விளையாட விரும்பிவிட்டார்கள்! ஒழுங்கு விதிகளுக்கும் கடமைகளுக்கும் புறம்பாகச் செயல்படும்படி அதிகாரிகளைக் கட்டாயப்படுத்துகிறார்கள்! நீதிபதி விசாரணை என்றால் விரண்டு ஓடுகிறார்கள்! முன்பு தொடர்ச்சியாக நடிகவேள் ராதாவின் நாடகத்தில் குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்தார்கள் காங்கிரசுக்காரர்கள்! கலவர வழக்குத் தீர்ப்பு ஒன்றின் வாயிலாக நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் "காங்கிரசு ரௌடிகள் காலித்தனம் செய்தனர்" என்று துணிவுடன் நீதிப் பண்புக்கு ஏற்ப எழுதி வைத்தார்! அத்தகைய நெஞ்சுரம் மிக்கவர்களிடம் இராமலிங்கம் கொலை வழக்கினை ஒப்படைக்க வேண்டும்! சர்க்காருக்குத் தன்னுடைய வாதத்திலே நம்பிக்கை இருக்குமானால் இதுபோன்ற நல்ல முயற்சிக்கு முன்வரட்டும்! முதுகுளத்தூர்க் கொலையிலே முக்காடு போட்டவர்களைப் போல் இப்போதும் பதுங்கிக்கொள்வது பண்புடையார் செயலல்ல! அதிகாரிகளைக் கைப்பாவைகளாக்காமல் விசாரிக்க வேண்டும். நெல்லை மாவட்டக் கலெக்டர் ஆர். பசுபதி நேர்மையுடன் நிர்வாகம் நடத்துகிறார் என்று பொதுமக்கள் பாராட்டுகிறார்கள். ஆனால் அங்கேயிருக்கும் பெர்மிட் காங்கிரசுக்காரர்கள் அவரை உடனே நெல்லையிலிருந்து மாற்ற வேண்டும் என்று தீர்மானித்து சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள்! அவர்கள் முடிவு மிக விரைவில் தெரிந்துவிடும்! சர்க்கார் நேர்மையுடன் நடந்துகொள்ளுமா? குடந்தை ஆர். டி. ஓ இராமலிங்கம் இலட்சியவாதிகளின் இதயத்திலே இடம் பெற்றுவிட்டார்-ஆட்சியாளர்கள் அவருடைய பிணத்தை நம்மிடத்திலே தந்துவிட்டார்கள். நாம் அந்த மாவீரனைக் காந்தியாரின் கல்லறைக்குக் காணிக்கையாக்குவோம்-காங்கிரசார் கண் திறக்கட்டும்!

ஏஜண்டுகள் தேவை

ரத்னா சுகபேதி அல்வா
(FRUIT-LAX)

பெரியோர்கள் முதல் குழந்தைகள் வரை சாப்பிடக் கூடியது. (இனிப்புள்ளது).

மாதிரி சாம்பில் இலவசம்.

விபரத்துக்கு
சம்பு இண்டர்ஸ்ட்ரீஸ், சலம்-2.

விந்தை! இது விந்தை!

18 ஆண்டுகளாக பிரக்ஞையற்று இருந்தவர் தன்னுணர்வு பெறுகிறார்

பியோதர் வெத்ரோவ் என்பவர் 18 ஆண்டுகளாக பிரக்ஞையற்ற நிலையிலே மருத்துவ மனையிலே இருந்தபின் திரும்பவும் இப்பொழுது தன்னுணர்வு பெற்றுவிட்டார். இந்த அதிசய நிகழ்ச்சியின் விவரங்கள் ஆகஸ்டு 3-ம் நாள் மாஸ்கோ பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

பியோதர் வெத்ரோவ் முன்பு சோவியத் சேனையில் பணியாற்றியவர். கடந்த யுத்தத்தின்போது 1942 ல் மாஸ்கோ போரில் காயமுற்று பிரக்ஞை இழந்துவிட்டார். அவருக்கு சிகிச்சை அளித்துவந்த டாக்டர் லியோனித் கொன்தெரியாகோவ் வழக்கமாக அளிக்கப்படும் பல மருந்துகளைக் கொடுத்து சிகிச்சை செய்ததுடன், புதிய மருந்துகளையும் சிகிச்சை முறைகளையும் பல்வேறு விதமாக இணைத்து பல வழிகளிலும சிகிச்சை செய்ததாகக் கூறினார். இவற்றுடன் மின்சார சிகிச்சை முறைகளையும் கையாண்டதாகச் சொன்னார்.

வெத்ரோவின் புகைப்படங்கள் எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளன. இப்பொழுது அவருக்கு 47 வயதாகிறது. 29-வது வயதில் காயமுற்று மருத்துவ மனைக்குக் கொண்டு வரப்பட்டவர் 47 வது வயதில் தன்னுணர்வு பெற்று விழித்தெழுந்து செஞ்சேனையிலே தான் விமானம் சுடும் பீரங்கிப் படை யினராக சேவை புரிந்ததுபற்றிப் பேசத்தொடங்கினார். மாஸ்கோ போரின்போது வேறு சில படை வீரர்களுடன் ஒரு ஆலைக் கட்டடத்திற்கு அனுப்பப்பட்டார். அப்பொழுது குண்டு வீச்சு ஆரம்பமாகிவிட்டது. அருகாமையில் வெடித்த குண்டினால் காயமடைந்து பிரக்ஞை இழந்துவிட்டார்.

பியோதர் வெத்ரோவ் இப்பொழுது முற்றிலும் நலமடைந்துவிட்டார். இன்னும் சில நாட்களில் மருத்துவ மனையிலிருந்து சென்றுவிடலாம் என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். வெத்ரோவ் முன்புபோலவே திரும்பவும் டிரைவராக வேலை செய்ய விரும்புவதாகக் கூறுகிறார். "டாஸ்"

சமுதாயத்திற்கு உழைக்கும் கைதிகள்

எச்ஸீடருக்கு அருகிலுள்ள மால்டன் கைதிகள் முகாமில் வசிக்கும் கைதிகள், சுற்றுப்புறத்தில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான பொருள்களை செய்து தருகிறார்கள் அவர்கள், குழந்தைகளுக்கு பொம்மைகளை செய்து தருகிறார்கள். இளைஞர் சங்கங்களுக்கு விசிப் பலகைகள் தயாரித்துக் கொடுக்கிறார்கள். குருடர்களுககும் ஊனமுற்றவர்களுக்கும் இசை விருந்தளிககிறார்கள். நோயாளிகளுக்கு உதவ இரத்ததானம் செய்கிறார்கள். அணிமையில், அவர்கள், உள்ளூரிலுள்ள வீர விளையாட்டுக்கள் பயிற்சி நிலையத்திற்கு பாய்மரப் படகு ஒன்றைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள் இந்தத் தகவலை சில தினங்களுக்கு முன்பு லண்டனில் நடந்த ஐ. நா. குற்ற ஒழிப்பு காங்கிரஸில் நடந்த விவாதத்தில் கலந்துகொண்டபோது மால்டன் கைதிகள் உதவித் தலைவர் திரு. ஃபிராங் ஸீஷிங் தெரிவித்தார்.

B. I. S,

"நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே!"

"நமது குலத்திற்கே தீராத அவமானத்தைத் தேடிக்கொண்டு வந்து விட்டாயே! ஊர் முழுவதும் சிரிக்கிறார்களே! என்னைப் பார்த்தால், தாமாகவே குவியும் கரங்கள் குவிய மறுக்கின்றனவே! அதோ போகிறாரே, அவர்தான் சண்பகத்தின் தந்தை என்று கேலி பேசுகிறார்களே!"

"அப்பா! நீங்கள் பேசுவது எனக்கொன்றும் புரியவில்லை!"

"புரியவில்லையா! புரிகின்ற மொழியில்தானே பேசுகிறேன். படிக்கப் போன பெண், காதலிக்கப் போய் விட்டாளே, அந்தச் சண்பகத்தைப் பெற்ற சண்டாளன் அதோ போகிறார் பாருங்கள் என்று ஊர்ச் சனமெல்லாம் என்னைப் பார்த்துக் கேலி செய்கிறார்களே! இன்னும்..."

"அப்பா! இவ்வளவு தானே! இதற்கா இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறீர்கள்! ஊர்மக்கள் என்று தான் ஒருவரைப் போற்றுவார்கள். நான் ஒன்றும் தகாத காரியம் செய்திடவில்லை. தக்க ஒருவரைத் தான் காதலித்தேன், தூய்மையாக..."

"அம்மா! அவ்வளவு தூரம் உன் காதலைத் தகுதியுடையதா, இல்லையா என்று யார் கேட்டார்கள் உன்னை? உனக்குக் காதலிக்க உரிமையேது? கணவன் மாண்ட நிலைமையில், கைம்

பெண் நிலையில் அல்லவா நீ இருக்கிறாய்? இந்த நிலையில் உனக்குக் காதல் புரிய இடம் ஏது? அதுவும் நம் சாதியல்லாத ஒருவனை..."

"அப்பா! காதலுக்குச் சாதி ஏது? உரிமைதான் எது? நான் கைம் பெண் நிலைமையில் இருப்பதாக நீங்கள் கூறுகிறீர்கள்; நம் நாட்டுப் பழக்க வழக்கங்கள், மூட நம்பிக்கைகள் கூறுகின்றன. ஆனால் என்னை யாரும், தொட்டுத் தாலி கட்டவில்லை. ஆகவே நான் அதை ஒத்துக்கொள்ளமாட்டேன். என்னைக் காதலிப்பவரும் ஒத்துக்கொள்ளவில்லை-ஆகவே..."

"ஆகவேதான் நீங்கள் அதிக தூரம் போய்விட்டீர்கள் போலும்!" என்றார் தந்தை.

"எவ்வளவு தூரம் அப்பா?" என்றாள் சண்பகம்.

"நான் என் வாயால் அதை எப்படிக் கூறுவேன்? இந்தா, இந்தக் கடிதங்களை நீயே படித்துப் பார்!" என்று கூறி எழுந்து தம அறையிலிருந்து ஏழெட்டுக் கடிதங்களை எடுத்துச் சண்பகத்தின் மீது வீசி எறிந்தார் சண்பகத்தின் தாயார் முதலிலிருந்தே இவர்களின் உரையாடல்களைக் கவனித்துக்கொண்டு தான் இருந்தாள். ஆனால் இந்தப் புதிய திருப்பத்தை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கடிதங்களை ஒவ்வொன்றாகப் படிக்க ஆரம்பித்தாள். ஒவ்வொரு கடிதத்தையும் படித்து முடித்ததும், சண்பகத்தின் கண்களிலிருந்து நீர் சொட்டு, சொட்டாக வடிந்தது. கடிதத்தின் வாசகங்கள் ஏறக்குறையக் கீழ்க்கண்ட கருத்தையே கொண்டிருந்தன.

"உமது மகள்-நிச்சயதார்த்தமான பிறகு மாப்பிள்ளை இறந்துவிட்ட காரணத்தால்-வெளியூருக்குச் சென்றவள், அங்கே படிக்கப் போய், யாரோ ஒரு வேறு சாதிக்காரனைக் காதலிப்பதாகவும், அவர்கள் இருவரும் காதல் விளையாட்டுக்களில் ஈடுபட்டதன் பலனாக, உமது மகள் கர்ப்பமாக இருப்பதாகவும் கேள்விப் பட்டு மிகவும் வெட்கமும், வருத்தமும் அடைகிறோம். உமது மகளை நீர் கண்டித்து வைக்கத் திறனற்றுப் போய் தான் வெளியூருக்கு அனுப்பியிருக்கிறீர்கள் என்று நினைக்கிறோம். ஆகவே, உம்மையும் உமது குடும்பத்தையும் சாதிப்பிரஷ்டம் செய்ய முடிவு செய்திருக்கிறோம்"

எல்லாக் கடிதங்களும் இதே மாதிரிதான் இருந்தன. ஒவ்வொரு கடிதமும் வேறு வேறு ஊர்களிலிருந்து வந்திருந்தன. கையெழுத்தும் வேறு வேறாகத்தானிருந்தது.

"அப்பா! இது அபாண்டம்! இது பொய்! நாங்கள் இருவரும் உள்ளத்தால் ஒன்றுபட்டோமே தவிர, உடலால் உறவாடவில்லை. நம் குல தெய்வத்தின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்" என்று அழுதபடி கூறினாள் சண்பகம். அவள் உள்ளம் வெடித்து விடும் போலிருந்தது.



"உண்மையோ, பொய்யோ எனக்குத் தெரியாது. ஊரார் இப்படி எண்ணுகிறார்களே, அதை எப்படி நான் மாற்றுவேன்? ஐயா, என் பெண் உடலால் உறவு கொள்ளவில்லை, உள்ளத்தால்தான் உறவாடினாள் என்று கூறுவேனா? எனக்குத் தீராத அவமானத்தைத் தேடித் தந்துவிட்டாயே! நம் குலப் பெருமையைப் போக்கடித்துவிட்டாயே! நான் இந்த அவமானத்திலிருந்து எப்படி மீள்வேன்? • தற்கொலை! ஆம்! ஒரு முழக் கயிறுதான் எனக்கு வழிகாட்டி!" என்று கூறினார், மனமொடிந்தவர்போல் முகத்தை வைத்துக்கொண்டு, "இப்பொழுது கூட ஒன்றும் குடி முழுகிப் போய் விடவில்லை. நீ அந்த ஆசிரியரை மறந்துவிட்டு இங்கேயே இருந்து விடு. ஊர் மக்களைநான் எப்படியாவது சமாதானம்செய்து கொள்வேன்" என்றார்.

"அப்பா! அது மட்டும் முடியாத காரியம்! ஊர்மக்கள் சொல்கிறார்களே என்பதற்காக ஒரு காரியத்தைச் செய்யமாட்டேன்; ஊர் மக்கள் சொல்லவில்லையே என்பதற்காக ஒரு காரியத்தைச் செய்யாமலிருக்க மாட்டேன். எனக்கு உண்மை, நியாயம் என்று தோன்றிய கருத்துக்களை நிறைவேற்ற முயல்வேன்"

"அப்படியானால் நீ அந்த ஆசிரியரைக் காதலிப்பது உண்மைதான் அல்லவா? அவரை மறக்கமாட்டாய் அல்லவா? எனக்கு நேரிட்ட அவமானத்தைப் போக்கமாட்டாய் அல்லவா? நீ போக்காவிட்டால், நானே போக்கிக்கொள்கிறேன்... உன்னைப் பெற்று வளர்த்ததற்கு நீ ஆற்றிய உதவி இதுவேயாகட்டும். மகளுக்காகத் தந்தை மரணத்தைத் தழுவினார் என்றாவது உலகினர்கூறட்டும். நீ அவமானச் சேற்றில் புரள உரிமை கேட்கிறாய். அந்த உரிமை தருகிறேன்; என் உயிரைப் போக்கிக்கொண்டு. தீராத களங்கம் ஏற்படுத்திவிட்ட நீ, காளைபைப்போல் திரிகிறாய் நான் திண்டாடுகிறேன். சாகவேண்டியவள் நீ; ஆனால் நான் சாகிறேன் உனக்காக. இருவரில் ஒவர் உயிர் துறக்க வேண்டும். அப்போதுதான் இந்தக் கறை அழியும்; குறை தீரும்." என்று ஆத்திரத்தோடு பேசிவிட்டு வெளியேறிவிட்டார்.

தனக்கு வந்த கடிதங்களின் மேலுறைகளை மட்டும் தனித்தனியே எடுத்துப் பலவேறு கடிதங்களைப் பல்வேறு கையெழுத்துகளில் எழுதி அவைகளில் வைத்துச் சண்பகத்திடம் கொடுத்தார். அவளும் அவை வேறு வேறு ஊர்களிலிருந்து வந்ததாகவே நம்பினாள்.

மறுநாட் காலை சண்பகம் ஆற்றில் பிணமாக மிதந்தாள்.

சண்பகத்திற்கு வேண்டிய ஈமக் கடன்களை மகிழ்ச்சியோடு செய்து முடித்தார் தந்தை. தன் குலப் பெருமையைக் காப்பாற்றி விட்ட பெருமை அவர் முகத்தில் தாண்டவமாடியது. தாய் அடைந்த துக்கம் சொல்லி முடியாது. தந்தை ஆடிய நாடகம், தாய்க்கு ஒன்றும் புரியவில்லை. இப்படி ஏமாற்றி, மரண

மடையச் செய்து, சண்பகத்தை "உயிர் துறந்த தியாகி, கணவனையே நினைந்து, நினைந்து உருகி, உயிர் துறந்த உத்தமி, கன்னிப் பெண்களின் குல தெய்வம்" என்றெல்லாம் போற்றிப் புகழலானார் சண்பகத்தின் தந்தை. நாளடைவில் சண்பகம் அந்த வட்டாரத்தில் ஒரு தெய்வமாகப் போற்றப்பட்டாள். முக்கியமாகக் கன்னிப் பெண்கள் எல்லோரும் அவளைப் பூசித்து வந்தால், தங்கள் மாங்கல்யத்துக்கு ஒருவிதமான ஆபத்தும் வராமல் சண்பகம் பாதுகாப்பாள் என்று மக்கள் நம்பினர். அந்த அளவிற்கு மக்கள் ஏமாற்றப்பட்டனர். சண்பகம் தெய்வமாக மாறினாள்.

★

"இதுதான் நடந்த கதை. சண்பகத்தின் படம்தான் அந்த வீட்டில் வீட்டில் இருந்தது. அவளை அவள் வீட்டார் தெய்வமாக மதித்துப் பூசித்து வருகின்றனர். சுற்றுப்புறங்களிலும் அப்படியே...இந்தக் கதை சிலருக்குத்தான் தெரியும். தெரிந்தவர்கள் எல்லோரையும் துரத்தி விட்டார்கள். நான் ஒருவன்தான் இருக்கிறேன்..." என்று கூறிமுடித்தான கிழவன்.

எனக்கு அன்றிரவு அதற்குமேல் வேலை ஓடவில்லை.

தலைமை நிலையச் செய்தி

தலைமைக் கழகத் தேர்தல்

25-9-60 ஞாயிறு

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் கழக அவைத் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், முக்கிய குழுக்கள் முதலிய தேர்தல்கள் 25-9-50 ஞாயிறன்று சென்னையில் நடைபெறும்.

இடம், நேரம், பிற விவரங்கள் அனைத்தும் பின்னர் அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

வெண்பாப் போட்டி

தேடிக் கொணர்ந்த திரு.

தாய்நாட்டில் வாழ்வதற்குத் தக்கவழி யில்லாமல்
போய்விட்டேன் தென்னிலங்கை பொன்னுடே !-ஓயாது
பாடுபட்டுக் கண்டதுவோ பாழ்காச நோயதுதான்
தேடிக் கொணர்ந்த திரு !

—பூவை-அமுதன், சென்னை-6.

கற்புக் கரசியாம் கண்ணகியை விட்டகன்று
மற்ருேர் விலைமாதாம் மாதவிபால்-சிற்றின்பம்
நாடித் திரிந்தமையால் நற்கோ வலனிழந்தான்
தேடிக் கொணர்ந்த திரு.

—தி. இர. வெங்கடேசன், சிந்தாதிரிப்பேட்டை.

வாடித் தளர்ந்தும் வறுமை வயப்பட்டும்
பாடித் திகழ்தமிழ்ப் பாவலர்-கூடியுற
வாடிக் களித்துப் பகுத்துண்பர் தாமுயன்று
தேடிக் கொணர்ந்த திரு.

—சா. கா. சாகுல்அமீது, சித்தையன்கோட்டை.

வெற்றிப் பெருஞ்சிறப்பால், வீரத்தால், நற்பண்பால்,
உற்றஎழிற் சீர்மை ஒழிவதுவோ ?-செற்ருரால்
வாடி வதங்குவதோ ? வையத்தில் நந்தமிழர்
தேடிக் கொணர்ந்த திரு.

—நெல்லை. பனை. பழநியப்பயன், நெற்குப்பை.

காதற் கடல்மூழ்கி, கள்உதட்டில் தேன்குடித்து,
மோதிவரும் துன்பம் முறியடித்துக்-கோதாய்நாம்
கூடிக் களித்தெடுத்த கொஞ்சுமெழிற் பிள்ளைகளே
தேடிக் கொணர்ந்த திரு.

—புலவர் குமரிமன்னன், சேர்வைநகர்.

வாழ்விற்கு மார்க்கமில்லை ! வந்தென்ன நாட்டுரிமை !
ஏழிரண்டு ஆண்டாகி என்கண்டோம் ?-பாழாட்சி
கேடும் பசியும் கிளர்ந்ததன்றி வேறுண்டோ
தேடிக் கொணர்ந்த திரு.

—மு. வரதராசன், துறையூர்.

காழ்த்த தனிஅறிவால் கார்போல் சிதம்பரனுர்
கீழ்த்திசை மாநாட்டில் சென்றறிஞர்-வாழ்த்துரைக்க
கோடிக் கருத்துரைத்துக் கோடாத சீர்மொழிக்குத்
தேடிக் கொணர்ந்த திரு.

—சி. தணலன், தச்சம்பத்து.

எங்கெங்கோ வாழும் இளங்கவிஞர் ஆர்வமெலாங்
இங்கேவெண் பாவாய் எழுவதென்ன ?-பொங்குதமிழ்
பாடி வருந்"தென்றல்" பாவலரைத் தோற்றுவித்துத்
தேடிக் கொணர்ந்த திரு.

—சொ. சண்முகம், மேலைச்சிவபுரி.

சென்ருளோ வெஞ்சினத்தால் செத்தாளோ என்காதல்
கொன்ருளோ என்வாழ்வைக் கொன்ருளோ-என்றேநான்
ஓடிக் களைத்தேன் உணர்வழிந்தேன் யான்பாவி
தேடிக் கொணர்ந்த திரு.

— எம். எஸ். இராமசாமி, அருப்புக்கோட்டை.

கோடி இருந்தென்ன; கோபுரம்போல் வீடதனில்
மாடி இருந்தென்ன, மாண்புடனே-நாடியதும்
ஓடி உபசரிக்கும் உற்றதுணை ஆனவளே
தேடிக் கொணர்ந்த திரு.

—சா. இராமாநுசம், இரெட்டணை.

அன்பு மனையாள் அருகிருந்து வட்டிலிட்ட
இன்ப வமுதிலிரு கையளைந்து- மென்மழலை
பாடிக் களிப்பூட்டும் பைங்குழவிக் கீடாமோ
தேடிக் கொணர்ந்த திரு

—கோவை செல்லம், கோவை.

காதற் கடலில்நான் கண்டெடுத்த நன்முத்தாள்
கூதற் பருவக் குளிர்போக்கி-போதையுடன்
கூடிக் களிக்கக் குவலயம் முற்றிலுமே
தேடிக் கொணர்ந்த திரு.

—மு. கிருட்டிணசாமி, எம். காம்.

ஒன்றிரண்டு நான்கோ டொதுங்கிடுவோம் என்றவர்தான்
இன்ருே டெனக்களித்தார் எண்மதலை-நின்றுழன்று
வாடி வறுமையிலும் வற்ருத பிள்ளைகளே
தேடிக் கொணர்ந்த திரு.

—வடுவூர் இளங்கோ, நாகப்பட்டினம்.

மங்கை முகங்கண்டு மாமதி கண்புதைக்கும்;
நங்கை நகைத்திட நன்முத்து-மங்கிடுமால்;
ஈடில்லாக் கன்னலொக்கும் இன்சொற்கள்; இவ்வுருவே
தேடிக் கொணர்ந்த திரு.

—மு. அ. வருசை இபுருகிம், செய்துங்கநல்லூர்.

தண்ணிலவு போல்ஒளிரும் தங்க நிறத்தாளைப்
'பெண்'ணுகப் பார்த்துவந்தார் என்பெற்ருேர்-மண்ணுலகில்
ஈடில்லாப் பேரழகிஎன் பெற்ருேர் தாமெனக்குத்
தேடிக் கொணர்ந்த திரு.

— சு. மா. இராமலிங்கன், புதுவை.

பண்புடையார், தீச்சொல் பகர்ந்தறியார், மட்டில்லா
அன்புடையார், கற்ற அறிவுடையார்-அன்னவரே
நாடியென் பெற்ருேர்கள் நாயகராய் என்றனுக்குத்
தேடிக் கொணர்ந்த திரு.

—கோ. கஸ்தூரி. சென்னை-7.

காய்கனிந்தால் வௌவால் கடுகி[illegible]ரும்; அன்புசெய்யும்
தாய்மடிக்கே பிள்ளை தவழ்ந்து[illegible]ம்-ஆய்கவி[illegible]தை
நாடிப் பயில்பவர்க்கு நாநலமே செந்தமிழால்
தேடிக் கொணர்ந்த திரு

—பனை. சண்முகம், நெற்குப்பை.

எத்தனையோ நல்லிளைஞர் எண்ணத்தில் ஒண்கவிதை
வித்தூன் றியதால் விளைந்திட்ட-முத்தனைய
பாடல்தாம், செந்தமிழ்த்தாய் பாதஞ்சேர்க் கத்'தென்றல்'
தேடிக் கொணர்ந்த திரு.

—தே அறிவுடைநம்பி, சென்னை-4.

தென்தமிழின் தேனூற்று; சிந்தனையின் பேருற்று;
அன்புமிகும் அண்ணு அறிவூற்ரும் !-என்பொடிய
வாடிக் கிடப்போர்க்கு வாழ்வளிக்கத் தென்னுடு
தேடிக் கொணர்ந்த திரு !

—கும்பகோணத்தான்.

காலமுற்றும் தூங்கும் கருங்கல்லின் பேராலே
வேலையற்ற வீணரின் வீடான-ஆலயத்தில்,
கோடிக் கணக்கில் குவிவதெலாம் ஏழையர்கள்
தேடிக் கொணர்ந்த திரு.

—அனுசூயா இராமகிருட்டினன், புதுச்சேரி.

பாரதத்தைக் காட்டிநிதி பாரெங்கும் சென்றி[illegible]ந்து
நேரரசு நீராய்ச் செலவழித்தும்-ஊரெங்கும்
வாடிமக்கள் சாகின்ருர்; மாண்டழிந்து சென்றதெங்கோ
தேடிக் கொணர்ந்த திரு.

—சா. நடராசன், சென்னை-12.

எந்நாட் டவர்க்கும் இனிதாம் குறள்மறையே
செந்நாப் புலவன் செழுந்தமிழர்-கண்ணேபோல்
கோடிக் கருத்தாய்ந்து ஞானக் கடல்மூழ்கித்
தேடிக் கொணர்ந்த திரு.

—மூதுரைப்பித்தன், சென்னை-12.

புறம்அகமும் மேகலையும் பொன்னுர் சிலம்பும்
குறளும் கலம்பகமும் கூர்வாள்-திறந்தன்னைப்
பாடும் பரணியிவை பாவலர்கள் எம்தாய்க்குத்
தேடிக் கொணர்ந்த திரு;

—கி. இராசமாணிக்கம், எரகுடி.

மாசிலா நல்லன்பால் மாண்புடைய தன்செயலால்
ஆசிலாப் பெண்மை யழகினுல்- காசினியில்
நாடி மணங்கொண்ட நங்கையே நான்வாழ்வில்
தேடிக் கொணர்ந்த திரு

—பா. பா. சோமநாதன், மயிலாப்பூர்.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எஸ். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.